A-PDF MERGER DEMO



கடவுள் துணை.

# ஸ்ரீ
# ஹைத்தயம்மாள் சரித்திரம்.

புது மவுண்ட்டன் பிரஸ், குன்னூர்.



கடவுள் துணை.

# ஸ்ரீ
# ஹெத்தயம்மாள் சரித்திரம்.

புளு மவுண்ட்டன் பிரஸ், குன்னூர்.



N. N. பொக்கமாதா கவுடர்,
நடுஹட்டி,
கட்டபெட்டி போஸ்ட்.



**ஸ்ரீ ஆறுமுகவனை நாறு மலர்தொடு கூறுமடியவர்**
**பேரும் பெற ஆறுமுகவேல் சுப்ரமணிய சுவாமி துணை.**

**நீலகிரி ஜில்லா மலைவாசிகளாகிய படுக குடிகளில் ஆதியான**
**ஏழு ஹெத்தப்பர் ஏலிங்கி அம்மன் என்பவர்களின் வரலாரும்,**
**பேரகண்ணி ஸ்ரீ தொட்ட ஹெத்தே,**
**பெத்தாளா ஸ்ரீ சவடி ஹெத்தே**
**என்று வழங்கிவரும் மஹா சக்திக்களின் வரலாருகளை**
**சேர்க்கப்பட்டது.**

## முகவுரை.

நீலகிரி மலைக்கு குடியேரிவந்த படுக வம்சத்தாரில் ஆதியானவர்கள் இப்போது இம்மலையில் வசிக்கும் ஏழு ஹெத்தப்பர். ஏலிங்கி அம்மன், என்பவர்களின் பரம்பரை வரலாற்றையும், பேரகண்ணி ஸ்ரீ தொட்டஹெத்தே பெத்தாளா ஸ்ரீசவுடிஹெத்தே என்று பெயர் வழங்கி கொண்டாடிவரும் மஹா சக்திகளின் சரித்திரத்தையும், என்பது வருஷகாலமாய் மூத்தோர்கள் அனைவராலும், ஹெத்தே சிஷ்யர்கள் அனைவராலும் கேட்டறிந்து வந்து இப்போது இவ்வயதில் மஹா சக்திகளின் கிருபையால் இச்சரித்திரத்தை ஆரம்பித்து ஆவலுடன் எழுதலானேன் நான் ஏழு ஹெத்தப்பரில் ஒருவனாகிய குருடஹெத்தப்பன் தலைக்கட்டிலும், தொட்ட ஹெத்தேசவுடி ஹெத்தே என்னும் மஹா சத்திக்களின் பரம்பரையிலும் பிறந்தவன் ஐம்பது வருஷகாலமாய் ஹெத்தே சத்திக்களின் சிஷ்யனும் பெத்தாளவிலுள்ள ஸ்ரீ ஹிரியஒடைய, சவுடிஹெத்தே முதலிய கோயில்களுக்கு பரம்பரை தர்மகர்த்தாவாயும் இருந்து வருகிறேன். பத்து வருஷ காலமாய் எண்டோமெண்டு போர்டாரால் டிரஸ்டி என்னும் அதிகாரம் பெற்றும் கோயில் காரியங்களை பயபக்தியுடன் கவனித்து

பார்த்து வருகிறேன். முப்பது வருஷ காலமாய் ஸ்ரீ சற்குருநாதர் உபதேசம் பெற்று அவர் சிஷ்யனுயும் நடந்து வருகிறேன். இள வயதில் நார்மல் ஸ்கூலில் படித்து ஸ்பெஷல் அப்பர் பிரைமரி பரீட்கைஷயில் தேர்ந்திருப்பதால் இந்த காபியை என் கைப்பாட்டால் எழுதி பிரஸ் செய்து விநியோகம் செய்யப்பட்டது.

## பாம்பறை.

1. குருட ஹெத்தப்பன் அவர் மகன் 2. ஹள்ளி ஹெத்தப்பன் அவர் மகன் 3. உப்பஜ்ஜ ஹெத்தப்பன் அவர் மகன் 4. காக்கே ஹெத்தப்பன் அவர் மகன் 5. புட்டா ஹெத்தப்பன் அவர் மகன் 6. நஞ்சய்யா கவுடர் அவர் மகன் 7. ஓடநஞ்சப்பா கவுடர் அவர் மகன் 8. பொக்கமாத கவுடர் அவர் மகன் 9. ரங்கா கவுடர் வயது இருபது.

என் மூத்த பெண்கள் வகையில் 11 தலைக்கட்டும் எங்களுக்கு மூத்த குடும்பங்களில் 14 15 தலைக்கட்டுமாய் வருகிறது.

N. N. பொக்கமாதா கவுடர்.

## சுலோகம் சுயபடுக பாஷை.

ஈயு ஹெத்தப்பரு, ஏலிங்கி ஹெண்ணு, ஏவல் தொரைறயன எலக்கண்ணுடி ஜோய்க்கிண்டி, ஜே தய்கே எரசி மக்கரி எம்ப ஹிரிய தேவர ஹெகலுனெ ஹொத்துதலே மலே சீமை யெந்த எல மலெ சீமைக பப்பனெ காடு காடு, அலெது காரே மேடு பந்து கால சந்து குளிந்து எரசீ மக்கரி இட்டுட்டு எடதாரிக ஹோகி மக்கரிய மதிமாடி, மறசி திரிகி பந்து காரை மெர மேட நோடு வனே ஈழுதலே நாகப்ப எரசி மக்கரியோகிப்பனெ, கர்த்த ரங்க தோரித எந்து கையெத்தி சரணமாடி மரசி திரிகி பந்து சோலெ சோலெ சுத்தி நீல மலெ கஹத்தி காரை மொறவ எதிருநோடி கல்லா செலெ நட்டு நீலகிரி ரங்கசாமி எந்து நெலெ நாட்டித வக்கர நெஞ்சுனெகெ நெனத்து பாரிவோ.

## ஏழு ஹெத்தப்பர் எலிங்கி அம்மன் வரலாறு.

ஏழு ஹெத்தப்பரும் எலிங்கி அம்மனும் மைசூர் ராஜ்யம் தலைமலை என்னும் இடத்தில் வசித்து அவ்விடத்திலிருந்து நீலகிரி மலைக்கு குடியேறி வந்தவர்கள். ஏழு ஹெத்தப்பரும் எலிங்கி அம்மனும் ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள். ஏழு பேர் சகோதிரர்களுடன் ஒரு பெண் மாது பிறந்தால் அம்மாதுக்கு எலிங்கி அம்மன் என்னும் சந்தோஷப்பெயர் விளங்கி வந்தார்கள். நீலகிரி மலை குடியேறி வந்த படுக வம்சத்தாரில் இவர்கள் ஆதி குடிகள்.

இவர்கள் மைசூர் ராஜியம் தலை மலை என்னும் இடத்தில் வசித்துக் கொண்டிருக்கையில் மகமதிய அரசாங்க காலத்தில் எல்லா ஜாதியாரும் மகமதிய மதத்தில் சேர வேண்டியதாம் என்னும் ஒரு வதந்தியைக் கேட்டு குலத்துக்கு அழிவு வராதபடி காப்பாற்ற வேணுமென்கிற கருத்தைக்கொண்டு பயந்து ஒளிந்தோடி வந்தவர்கள், வதந்தியைக்கேட்டவுடன், ஒ, ஒ மோசம் வந்துவிட்டதே இதற்கு என்ன வகை செய்வோமென்று குடும்பத்தார்கள் எல்லாரும் ஓரிடத்தில் கூடி ஆலோசித்தார்கள். முடிவில் இன்றைய ராதிரிக்கே நடு இருளில் வீட்டை விட்டு புறப்பட்டு சோலைக்குள் நுழைந்து அரசன் கண்ணுக்கெட்டாத தூரம் விடியுமுன் சோலைக்குள்ளாகவே சென்று வனங்களில் காய் கனிகளைத்தின்று சஞ்சரித்து ஜீவித்து வருவோமென்று தீர்மானித்தார்கள்.

அன்றைய இரவு நடு ஜாமத்திலேயே வீட்டை விட்டு புறப்பட்டார்கள். புறப்படுகையில் தங்கள் குல தெய்வமாகிய ஹிரியஒடெயனின் லிங்கமாகிய எலக் கண்ணுடியும், அந்த லிங்கம் நாட்டிவைத்து பூசிக்கும், ஜோளிக்கிண்டியும், விசேஷ நாளில் சகோதரர் ஏழுபேரும் ஒற்றுமையுடன் பிரசாதம் உண்ணும் ஜெ தய்கே என்னும் ஒரு சத்துவட்டிலும் ஏழு பேருக்கும் பொதுவில் தானியம் அளக்கும் ஒரு ராசி கூடையும், மறக்காமல் எடுத்துக்கொண்டு இரண்டு மூன்று வேளைக்கு கட்டு சாதம் கட்டிக்கொண்டும் புறப்பட்டார்கள், அவ்விடத்தில் ஆறுவது சகோதிரன் மனைவி இறந்துப்போயிருப்பதால், சகோதரர் ஏழு பேரும் அவர்கள் மனைவிமார் ஆறு பேரும் எலிங்கி அம்மனும், அவள் புருஷனும், ஏவலாள் தொரையனும், அவன் மனைவியும் ஆக பதினேழுபேரும் புறப்பட்டு வனம் சென்றார்கள் யாராவது அறிந்துவிடுவார்கள் என்கிற காப்ராவால் ஒருவரோடு ஒருவர் பேசவகையில்லாமல் காட்டு வழியில் ஒருவர் பின் ஒருவராய் சத்தமின்றி நடந்தார்கள் சுமார் நாலு மைல் தூரம் நடந்து சோலைக்குள் நுழைந்து செடிமறைவில் இளைப்பாற உட்கார்ந்தார்கள் அங்கு ஒருவர் மூகம் ஒருவர் பார்த்துப் பேசி கவனிக்கையில் ஒருவரை ஒருவர் நம்பி (நேனை) என்னும் தொட்டிலில் தூங்கிக்கொண்டிருக்கும் சிறு பெண் குழந்தையை விட்டு விட்டு வந்ததாக அறிந்து எல்லோரும் துக்கித்து அழுது யோசித்தார்கள். திரும்பபோய் எடுத்து வரப்பார்த்தாலும் விடியற்காலை ஆகிவிடும் யாராவது கண்டு விடுவார்கள். இனி வேறு வழியில்லை நாம் எல்லாரும் இன்றைக்கோ நாளைக்கோ காடு வனங்களில் காலியாய் மாண்டு மடிய போகிறோம். அச்சிறு பெண் மாது வீட்டிலேயே எக்

கதி ஆனாலும் ஆகட்டும் வீடுகள் காலி இருப்பதைக் கண்டு யாராவது அருகில் போய் பார்த்தால் மாதுவின் அழு குரலைக்கண்டு எடுத்தாவது வளர்க்கட்டும். இனி அம்மாதுவை மறந்துவிடுங்கள் என்று ஒருவர்க்கொருவர் மனதை தேற்றியும் தீராத விசனத்துடன் வனத்தின் வழியாய் நடந்தார்கள், அன்று முதல் அவர்கள் வமிசத்தில் தொட்டிலில் குழந்தைகளை போடுவதை வெறுத்துவிட்டார்கள்.

இப்படி இவர்கள் இரண்டு மூன்று நாள் இராப்பகல் நடந்து வெகு தூரம் வந்து விட்டார்கள். இவர்கள் வீடுகள் மூடப்பட்டு பாழ் வீடாய் இருந்ததை அரசன் கேள்விப்பட்டு குடிகள் வீணாய் போன காரணம் என்னவென்று யோசித்து அவர்களைத் தேடிக்கண்டுபிடித்து என் முன் கொண்டு வர வேணுமென்று நாலு திக்கிலும் சிப்பாய்களை அனுப்பினான். அரசன் கட்டளைப்படி நாலாபக்கமும் சிப்பாய்கள் தேடிக்கொண்டே போனார்கள் போகவே அந்த மூத்தோர்கள் அத்திதொரை ஹள்ளஎன்னும் ஆற்றைத்தாண்டி அக்கரையில் இளைப்பார உட்கார்ந்திருப்பதை அவ்வழியாய் தேடிக்கொண்டு வந்த சிப்பாய்கள் கண்டார்கள் கண்டதும் இவ்வனத்தில் இருப்பவர்கள் இவர்கள்தான் என்று ஆனந்தத்துடன் அதி வேகமாய் ஆற்றருகே வந்து விட்டார்கள் வருவதைக்கண்ட பெரியோர்கள் ஏக்கமுற்று ஓ ஓ மோசம் வந்து விட்டது என்ன வகை செய்வோம் என்று ஏங்கி திகிலடைந்தார்கள். ஆனால் இதை அறிந்துஇப்போது பேர் வழங்கும் குருடஹெத்தப்பனானவன் தன் தோளின் மேல் இருக்கும் குல தெய்வமாகிய ஹிரிய ஒடைய னை நினைத்து எங்களுக்கு ஆபத்து வந்து விட்டது. எங்களை காற்பது உமது கடமை இப்பாலை வனத்தில் உன்னையன்றி வேறு திக்கில்லை என்று ஒரே மனதுடன் வேண்டினான் சிப்பாய்களும் ஆற்றைத் தாண்ட ஆற்றருகே வந்தார்கள் கங்கா தேவியோ திடீரென்று பெரு வெள்ளமாய் நிறைந்துவிட்டாள் சிப்பாய்கள் ஆற்றைத்தாண்ட முடியாமல் போயிற்று ஹா இது வென்னபுதுமைஎன்று ஒருவரைஒருவர் பார்த்து முழித்து அக்கரையிலேயே நின்று கொண்டிருந்தார்கள் வெள்ளம் குறையவில்லை இதை அறிந்த மூத்தோர்கள் தங்கள் மனதைதேற்றி அந்த இடத்தைவிட்டு புறப்பட்டு நடந்துவிட்டார்கள் சிப்பாய்கள் அக்கரையிலிருந்து கூப்பிட்டு எவ்வளவு சமாதான வார்த்தைகள் சொல்லியும் மூத்தோர்கள் அதை சிறிதேனும் கவனியாமல் சோலைக்குள் நுழைந்து மறைந்து போய்விட்டார்கள் சிப்பாய்கள வெகு நேரம் காத்திருந்தும் வெள்ளம் குறையவில்லை. அடடா கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போயிற்றே அருகில் கண்ணுக்கு தோன்றியும், கங்கையால் கைக்கு சிக்காமல் போய் விட்டார்களே, என்று விசனித்துக்கொண்டு வந்த வழியே திரும்பி போனார்கள் போய் அரசனைக் கண்டு நடந்ததை எல்லாம் தெரிவித்தார்கள் அரசன் விசனித்தும் கங்கையின் விசித்திரத்தைக்கேட்டு ஆச்சரிய பட்டும் இருந்தான் இப்படியிருக்க மூத்தோர்கள் காடு வனங்களின் மேல் அலைந்து திரிந்து இப்போது பேர் வழங்கும் காரமடை வனத்தை அடைந்தார்கள் அங்கு இளைப்பார ஒரு காரை மரத்தடியில் சாமான்களை எல்லாம் இறக்கிவைத்து அம்மர நிழலில் உட்கார்ந்து இளைப்பாற்றிக் கொண்டிருக்கையில் நேர்முகமாக வடமேற்கு திசையில் மலைகள் காணப்பட்டன அந்த மலைகள் வெயில் காங்கையால் நீல நிறமாய் தோன்றிற்று அதோ தெரிகிற நீலமலைக்கு ஏறி அந்த வனத்தில் ஜீவித்துவருவோம்

என்று தீர்மானித்துக்கொண்டார்கள் பிறகு சாமான்களை எடுத்துக்கொண்டு நீலமலையை நோக்கி மேட்டுப்பாளையம் வழியாய் நடந்தார்கள். மேட்டுப்பாளையம் ஆற்றைத் தாண்டி அங்கு இளைப்பாற உட்கார்ந்தார்கள். உட்கார்ந்து கொண்டு சாமான்களை கவனிக்கையில் அங்கு ராசிக்கூடையில்லை காரைமேடில் (காரைமரத்தடியில்) விட்டு விட்டு வந்து விட்டோம் என்று தெரிந்து இரண்டு வாலிப கெட்டிக்காரர்களை காரைமேடுபோய் எடுத்து வரும்படி திரும்ப அனுப்பினார்கள். அந்த வாலிபர்கள் அதிவேகமாய் ஓடிப்போய் காரைமரத்தடியை பார்க்க கூடையைக்கண்டார்கள். அந்தக் கூடைக்குள் படுத்து இந்த சகோதரர் ஏழுபேருக்கு பர்த்தியாக தன் ஏழு தலையை கூடைக்குமேல் தூக்கிக்கொண்டிருக்கும் ஏழுதலை நாகத்தைக்கண்டார்கள். கண்டு பயந்து நடுக்கமுற்று நாகத்தைக்கும்பிட்டு சரணம் செய்துவிட்டு, கூடையை விட்டுவிட்டு திரும்பினார்கள். அதிவேகமாய் மேட்டுப்பாளையம் ஆற்றைத்தாண்டி அவர்கள் கும்பலில் சேர்ந்து ஆத்திரத்துடன் விஷயத்தை தெரிவித்தார்கள். அதைக் கேட்ட எல்லோரும் ஆச்சரியப்பட்டு நமது குலதெய்வமாகிய ஸ்ரீ ரங்கநாதர் நம் ராசிக்கூடையில் உதித்துவிட்டார் ஆகையால் இன்றுமுதல் காரைமேடு ரங்கநாதர் என்று பூசித்துக்கொள்வோம் என்று ஆனந்தத்துடன் தீர்மானித்துக்கொண்டார்கள்

பிறகு அவ்விடத்தைவிட்டு நீலமலையை நோக்கிப்புறப்பட்டார்கள். பாலை வனத்தின்மேல் நடந்து தட்டு தடுமாறி அன்றிரவு வனத்தில்தங்கி மறுநாள் மலைமேல் வந்துசேர்ந்து உயர்ந்த மலை உச்சியில் ஏறினார்கள். அந்த மலை உச்சியிலிருந்து காரைமேடு குறிப்பைப்பார்த்தார்கள் காரைமேடு குறிப்பு நன்றாய் தோன்றியதும் எல்லோரும் உச்சிமேல் உட்கார்ந்துக்கொண்டு ஆலோசித்தார்கள். அதாவது நமது ராசிக்கூடை நமது குலதெய்வமாய் தோன்றிவிட்டதால் நாம் இனி இந்த காடு வனங்களைக்கடந்து காரைமேடுபோய் அந்த ரங்கநாதரை பூசித்துவர நம்மால் இயலாது இந்த இடத்தில் ஒரு சிறு கட்டடம் கட்டி இதில் கல்லால் ஒரு லிங்கம் உண்டாக்கி காரைமேடை நோக்கி நீலகிரி ரங்கநாதர் என்று பூசித்து ரங்கர் உதவியால் இம்மலையில் திரிந்துக்கொண்டிருப்போம் என்று தீர்மானித்து அந்த உயர்ந்த மலை உச்சியில் கல்லால் ஒரு சிறு கட்டடம் கட்டி அதற்குள் கல்லால் லிங்கம் வைத்து பூசித்து நீலகிரி ரங்கநாதர் என்று பெயர் வைத்து கொண்டாடி வந்தார்கள் (நீலகிரி) நீலமலை இதைக்கொண்டுதான் இந்த ஜில்லாவுக்கும் நீலகிரி ஜில்லா என்றும் பெயர் வழங்கிற்று பிறகு சுற்றுப்புறங்களை பார்த்து நாம் தங்கிக்கொள்ள ஒரு நல்ல ஸ்தலம் பார்ப்போம் என்று யோசித்து மலை உச்சியிலிருந்து புறப்பட்டார்கள் சுற்றுப்புற வனங்களை சுற்றிப்பார்த்துக்கொண்டு ஹட்டாரக் கோட்டை என்னும் இடத்தை சேர்ந்து அவ்விடத்தில் உத்துராய்யர் காலத்து மகாலிங்ககோயில் தெய்வத்தை கும்பிட்டுக் கொண்டு இரண்டு மூன்று நாள் தங்க அதைச்சுற்றிய வனங்களில் திரிந்துக்கொண்டு வருகையில் ஹட்டாரக்கோட்டைக்கு மேற்கு முகத்தில் சுமார் இரண்டு மைல் தூரத்தில் ஒரு நல்ல ஸ்தலத்தைக்கண்டு இவ்விடத்தை தான் நாம் இருப்பிடமாக்குவோம் என்று நினைத்து அந்த இடத்தில் மரக்கொம்புகளால் செட்டிக்கட்டி ஹிரிய ஒடைய சுவாமி வைக்க ஒரு ஸ்தலம் உண்டாக்கி மறுநாள் ஹட்டார கோட்டையிலிருந்து புறப்பட்டு அவ்விடம் வந்து சேர்ந்தார்கள், ஹிரிய ஒடைய சுவாமியை அந்த ஸ்தலத்

தில் வைத்து அந்த இடத்துக்கு ஹிரியனட்டிகம்பெ என்று பெயர் வகித்து தாங்களும் அந்த செட்டில் வசித்து அவ்வனத்தில் திரிந்துக்கொண்டிருந்தார்கள். அவ்விடத்தில் இருந்துக்கொண்டு அடிக்கடி நீலகிரி மலைக்குப்போய் ரங்கநாதரையும் பூசித்துக்கொண்டு வந்தார்கள்.

அது முதல் இவர்கள் வமிசத்தார் நீலகிரிமலை இச்சி ஏறி வருஷமொரு திருவிழா நடத்திக்கொண்டாடி வருகிறார்கள். ஹிரியனட்டிக்கம்பையில் சிலகாலம் வசித்துக்கொண்டிருக்கையில் காய்கனிகளுக்காக அசைச்சுற்றிய வனங்களில் திரிந்துக்கொண்டு வந்ததில் சமீபத்திலுள்ள ஒரு மட்ட ஜாகத்தில் முன்காலத்தில் கருங்கல்லால் கொத்தி கட்டியிருக்கும் ஒரு சிறு குகையும் அந்த குகைக்குள் பல உருவங்கள் அடித்திருக்கும் கற்சிலையையும் கண்டார்கள். அந்த இடத்தின்மேல் இஷ்டம்கொண்டு இவ்விடத்தில் தான் வசிக்கவேண்டுமென்கிற எண்ணம்கொண்டார்கள். எண்ணத்தின்படி ஹிரியனட்டிக்கம்பெயை விட்டு அந்த கற்சிலை அருகில் வந்து அவ்விடத்தில் தங்களுக்குவேண்டிய குடிசைக் கட்டி தெய்வத்துக்கும் ஒரு இடம் தயாரித்து அதில் வைத்து தாங்களும் குடிசையில் இருந்து வசித்துக்கொண்டு வந்தார்கள். அங்கிருந்துப்போய் நீலகிரி ரங்கநாதரையும் பூசித்துக்கொண்டும் வந்தார்கள். அந்த இடமானது நடுவில் பேட்டில் என்னும் கம்பம் நட்டு எருது கட்டி தானியம் தாம்படிக்கும் களத்தைப்போல் மட்டமான இடமாதலால் அந்த இடத்துக்கு பேட்டிலாட என்னும் சந்தோஷ பெயர் வைத்து வழங்கி வந்தார்கள். இப்படி சிலகாலம் அங்கு வசித்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் அவ்வனத்தில் அகஸ்மாத்தாய் ஒரு கலைமான் அவர்கள் கண்ணுக்குப்புலப்பட்டது. அந்த மானைக்கண்டதும் பிடித்துக்கொள்வோம் என்று இளைய சகோதரர் ஐவர் மானை பின்தொடர்ந்தார்கள். இவர்களைக்கண்ட மான் வேகமாய் ஓடவே இவர்களும் மானின் பின் ஓடினார்கள். சிலதூரம் துரத்திக்கொண்டு ஓடியதில் ஒருவன் இளைப்பால் ஒரு வனத்தில் நின்றுவிட்டான். மற்ற நால்வரும் வனத்தில் தனியாய் நின்றவனை கவனியாமல் மானை பின்தொடர்ந்துக்கொண்டே ஓடினார்கள். இப்படி இன்னும் சிலதூரம் ஓடுகையில் அங்கொரு வனத்தில் ஒரு கல்லின்மேல் ஒருவன் இளைப்பால் உட்கார்ந்துக்கொண்டான். அதையும் கவனியாமல் மற்ற மூவரும் மானின் கவனத்திலேயே ஓடினார்கள் மற்றும சிலதூரம்போய் இளைப்பால் ஒருவன் ஒருவனத்தில் நின்றுவிட்டான். அதை கவனியாமல் மற்ற இருவரும் மானின் கவனத்திலேயே துரத்திக்கொண்டு ஓடினார்கள். இன்னும் சிலதூரம் போய் அவர்களில் ஒருவன் இளைப்பால் அசந்து அங்கொரு வனத்தில் நின்றுவிட்டான். அதையும் கவனியாமல் ஒருவன் மாத்திரம் மானை விடாமல் ஒரே எண்ணத்துடன் பின்தொடர்ந்து போக சிலதூரம்போய் அந்த மான் ஒரு சீக செடிபுதரில் போய் நுழைந்து இளைப்பால் நின்றுவிட்டது. அந்த மூத்தோன் புதருக்குவெளியே நின்றுக்கொண்டு புதருக்கு கல்களை தூறி மிரட்டினான். அந்த மான் புதரிலிருந்து வெளியே வந்தது, புதரிலுள்ள ஒரு சீகை செடி மானின் கொம்பில் சிக்கி ஒடிந்து அந்த சீகை தளை கொம்பிலிருக்க தளையை கொம்பில் வைத்துக்கொண்டே வெளியே வந்தது அடுத்தாப்போல் ஒரு சிறு கிணறு இருந்தது கிணற்றைக்கண்டதும் மான்

இளைப்பால் கிணற்றில் தொப்பென்று விழுந்து க்ஷணநேரத்தில் உயிரை விட்டுவிட்டது. அந்த மூத்தோன் ஜெயித்ததாக தனியாய் கைத்தாளம்போட்டும் தீராத இளைப்பால் அந்த கிணற்றேறிமேல் படுத்து தூங்கிவிட்டான் இப்படி இவர்கள் ஒவ்வொருவரும் அவனவன் நின்ற வனங்களில் தீராத இளைப்பால் அங்கங்கு படுத்தவர்கள் தங்களை மறந்து நினைவில்லா தூக்கத்தில் மூழ்கி இருந்தார்கள் மறுநாள் காலையில் அங்கங்கு ஒவ்வொருவனும் விழித்துப்பார்த்து யோசிக்கையில் அண்ணனையும் காணோம் தம்பிமாரும் காணோம் பாழ்வனத்தில் தனியாயும் பசியோடும் இருந்துவிட்டேன் என்று ஒவ்வொருவனும் காபுறுவால் புறப்பட்டு பேட்டிலாட குடிசைசேர நினைத்து அவனவன் வனங்களில் தட்டுதடுமாறி கடவுளை தியானித்து நிதானத்தில் தனிதனியாய் பேட்டிலாடாவை சேர்ந்தார்கள் நால்வர் வந்தும் ஒருவன் வரவில்லை மூத்த தமயன்மார் வருதகை கேட்க இளைப்பால் அவனவன் தனிதனியாய் வனங்களில் தம்பி நின்றுவிட்டதை தெரிவித்தார்கள் இரண்டுமூன்றுநாளாயும் அவன் வரவில்லை அதனால் எல்லாரும் தீராத விசனத்துடன் துக்கித்துகொண்டார்கள் அதோடவே அவன் காலியாய் மறைந்துவிட்டான்.

இப்படி இவர்கள் இருக்கையில் எல்லாரும் ஏகமனதாய் இனிநாம் வனத்தில் சஞ்சரிப்பது சரியல்ல, இனி அரசன் பயங்கரமும் நமக்கில்லை, நாம் தனிதனியாய் ஹட்டிகள்கட்டி குடித்தனம்செய்து பிழைத்துவருவோம் என்று தீர்மானித்துக் கொண்டார்கள் இளையவர்கள் நால்வரும் கலைமானை பின்தொடர்ந்துபோய் இளைப்பால் அவனவன் தங்கி அப்பாலைவனங்களில் ஒண்டியாய் தூக்கத்தால் உயிரை மறந்தும் கடவுளால் ஆபத்துவருமல் காத்து தப்பித்திருப்பதை பார்த்தால் அந்த இடங்களே கடவுள் காண்பித்த இடமென்று பாவித்து அவனவன் தங்கிய இடங்களுக்கே போய் பிழைக்க மூத்த தமயன்மார்களின் அனுமதிபெற்று இளைய சகோதரர் மனைவிகளுடன் பேட்டிலாடாவை விட்டுபுறப்பட்டுபோய் விட்டார்கள் இவர்களில் கடைசி பிறந்தவன்தான் முன்தங்கிய வனத்தில் தன்மனைவியுடன் நின்றுவிட்டான் அந்த இடத்தில் குடிசைக்கட்டி இவன் எல்லாருக்கும் (இளையவன்) குன்னவன், ஆகலால் அந்த இடத்துக்கு குன்னூர் என்றுபெயர் வைத்து அங்குபிழைத்துவந்தான் அந்த பெயர்தான் குன்னூர் டவனுக்கு வழங்கிற்று ஹுலியன் என்னும் பெயரையுடையவன் சிலதூரம் போய்தான உட்கார்ந்த கல்லை நிதானித்து அதுவரைபோய் அந்தக் கல்லைக்கண்டு தன் சமுசாரத்தோடு அங்கு நின்று கல்லுக்குப்பக்கத்தில் ஒரு குடிசைக்கட்டி ஹுலியன் உட்கார்ந்த கல்ஆதலால் அந்த இடத்துக்கு ஹுலிக்கல் என்று பெயர் வைத்து அங்குபிழைத்துவந்தான் மற்றஇருவரும் சிலதூரம் போகையில் தூதன் என்னும் பெயரையுடையவன் தான்மூன்தங்கிய இடத்தில்போய் தன் சமுசாரத்துடன் அங்கு நின்று ஒரு குடிசைக்கட்டி தன் பெயர் தூதனாகலால் அவ்விடத்துக்கு தூதனூர் (தூதூர்) என்று பெயர்வைத்து அங்கு பிழைத்துவந்தான் கடைசியாக இருந்த ஹிரியன் என்னும் பெயரையுடையவன் தன மனைவியோடு தான் மானை விடாமல் போய் மான்விழுந்த கிணற்றருகே தான் தங்கியதால் அந்த இடைத்தைச்சேர்ந்து அங்கு ஒரு குடிசைக்கட்டி தன்பெயர் ஹிரியனாகலாலும் அவ்விடத்தில் சீகைபுதர் இருந்ததாலும் அவ்விடத்துக்கு ஹிரியசீகை என்று பெயர்

வைத்து அங்கு பிழைத்துவந்தான் இவர்களைத்தவிர பேட்டிலாடாவில் மூத்தசகோதரர்கள் இருவரும் அவர்கள் மனைவிமார்களும் ஏலிங்கி அம்மனும் தன்புருஷனும், தொறையனும் அவன் மனைவியும் இருந்தார்கள், இப்படி எல்லாரும் சிலகாலம் அங்கங்கு பிழைத்துவருகையில் பேட்டிலாடாவில் இருந்த ஏலிங்கி அம்மன் தன் புருஷனோடு கனிவகைகளுக்காக சுற்றுப்புறத்து வனங்களில் திரிந்துகொண்டு வருகையில் ஒரு மட்டமான திட்டைக்கண்டு நம் சகோதரர்கள்மாதிரி பேட்டிலாடாவை விட்டு பிரியும்போது இவ்விடத்தில்தான் ஹட்டிகட்டி பிழைப்பது சரியென்று இருவரும் சம்மதத்துடன் பேசி முடித்துக்கொண்டார்கள். சில நாளுக்குள் பேட்டிலாடாவில் இருந்த மூத்தசகோதரர்கள் தாங்களும் தகுந்த இடங்களில் தனித்தனி ஹட்டிகள் கட்டி பிழைத்துவர எண்ணி ஏலிங்கி அம்மனை தங்கையே நீ எந்த இடத்தில் ஹட்டிக்கட்டிக்கொள்ள இஷ்டமுண்டு என்றுகேட்டார்கள் ஏலிங்கி அம்மன் சகோதரர்களே அதோ நேரில் தெரியும் திட்டில்தான் இருந்து பிழைத்துவர அனுமதி தாருங்கள் என்று கேட்க சகோதரரும் சம்மதித்து அனுமதிகொடுத்தார்கள் அண்ணன்மார் உத்திரவைபெற்றுக்கொண்டு ஏலிங்கி அம்மனும் தன்புருஷனும் பேட்டிலாடாவை விட்டுபுறப்பட்டு அந்த திட்டில்சேர்ந்து அங்கொரு குடிசைக்கட்டி பிழைத்து வந்தார்கள், அந்த திட்டில் ஒரு அகலமான கல்பாறை ஒன்றும் அதன் நடுவில் ஒரு பிளவு சந்தில் ஜக்கல் என்னும் ஒரு முள்செடியும் முளைத்திருந்ததால் அந்த ஹட்டிக்கு ஜக்கனறை என்று பெயர்வழங்கி வந்தார்கள் எல்லாருக்கும் மூத்தவனும் தனக்கு நேர்இளையவனும் தொறையனும் பேட்டிலாடாவில் சிலகாலம் ஜீவித்துக்கொண்டிருக்கையில் கடவுள் பின்வரும் காரணங்களை அறிவிக்க இளையவனுக்கு கண்கள் தோன்றாமல் குருடனாக்கிவிட்டான் ஆகையால் அவன் குடிசையை விட்டு வெளியே போகமுடியாதகாரணமாயிற்று மூத்த சகோதரன் தினந்தோரும் வனங்களில் திரிந்து காய்கனி தேன் முதலியவைகளை தேடிக்கொண்டுவருவான் ஒருநாள் மூத்தசகோதரன் வழமைபடி காட்டுக்குபுறப்படுகையில் தம்பியாகிய குருடனுக்சப்பன் காட்டுக்குப்போக இஷ்டம்வைத்து அண்ணா நானும் வனத்துக்கு வருகிறேன் என்கையை பிடித்துக்கூட்டிக்கொண்டு போய் ஒரு கல்லின்மேல் உட்கார வைத்து விட்டு நீர் வனம் சுற்றி காய்கனிகள் தேடிக்கொண்டு கடைசியாக வந்து என்னைக்கூட்டிக்கொண்டு குடிசைக்கு வருவோம் என்றுகேட்க அண்ணன் அதற்கு ஒப்புக்கொண்டு அப்படியே கையை பிடித்துக்கொண்டுபோய் காட்டில் ஒரு பெரிய கல்லின்மேல் ஏற்றி அதன்மேல் உட்கார வைத்துவிட்டு தான் வனத்தில் சுற்றிவர போய்விட்டான். அண்ணன் போய் சிலநேரம் கழிந்தபின் ஒரு முகில் நிறைந்து மழை பெய்துவிட்டது. அப்போது குருடனுக்கு யாதொரு ஆதரவு இல்லாததாலும் கல்லைவிட்டிறங்கும் வகை இல்லாததாலும் ஆபத்துவந்து விட்டதென்று கிலேசலங்கி வாயுறவால் அண்ணா அண்ணா என்று அலறிக்கூப்பிட்டான் அண்ணன் வரவே இல்லை இவன் பரிதாபத்தை பார்த்துக்கூப்பிட்ட சத்தத்துக்கு கடவுள் வந்து திடீரென்று தடைபிடித்தார் குருடன் தன் அண்ணன் தானென்று அண்ணா நல்லா பிடி என்றான் கடவுள் அண்ணன் அல்ல நான் கடவுள் பயப்படாதே என்றார் அவ்வார்த்தையைக்கேட்ட குருடன் சுவாமி குடையை நல்லாபிடித்து என்னைக்காப்பாற்று என்றான் சில நேரத்துக்குள் மழையும் நின்றுவிட்டது பிறகு கடவுள

குருடனைப்பார்த்து உன் கண்ணைத்திறப்பேன் கண்திறந்தால் நீ என்னத்தருவாய் என்றுக்கேட்டார் அதற்கு குருடன் ஆனந்தத்தோடு சுவாமி கண்ணைத்தந்தால் இந்த இடத்துக்குக் கண்ணைத்தந்த காரேய்யாவென்று நினைத்து வருஷாவருஷம் ஆடு பலிக்கொடுத்து கொண்டாடி வருகிறேன் என்று சொன்னான் அதற்கு கடவுள் உன் எண்ணத்தில் தோன்றியபடியே நடந்துவா தவிர பலிக்கொடுத்த உடனே இந்தக் கல்லின் அடியில் உள்ள குகைக்குள் ஒரு நீண்ட காண்டியை விடு அந்த காண்டியில் பலி ஆட்டின் விலை வரும் அதை எடுத்துக்கொள் என்றார் இவ்விதம் சொல்லி முடிந்ததும் இதோ உன் கண்ணைத்திறந்தேன் என்றார் உடனே குருடனுக்குக் கண் திறந்து இருட்டரையில் விளக்கு எறிந்தாப்போலாயிற்று அதற்குள் கடவுள் க்ஷணத்தில் மறைந்துவிட்டார். குருடனுக்கு கண் திறந்த சந்தோஷம் இருந்தும் கண்ணைத்தந்த கடவுள் அந்தக்கண்ணுக்கு தரிசனமாகாமல் போய்விட்டாரே என்று விசனித்துக்கொண்டு வனத்தில் சென்ற அண்ணன் வரவில்லையே என்று எதிர் பார்த்துக்கொண்டிருக்க அண்ணன் வரவேயில்லை பொழுதும் போய்விட்டது குடிசை வழியும் தெரியவில்லை இனி இங்கிருந்தாலும் இவ்வனத்தில் ஒண்டியாய் தங்கவேண்டியதாய் நேரிடும் இதற்கு என்னசெய்வேன் என்று கடவுளை தியானித் தான் அப்பொழுது காலையில் அண்ணன் தன்னைக்கூட்டிக்கொண்டு வரும்போது புதரில் செடிகளை அப்படியும் இப்படியும் விலக்கிக்கொண்டு வந்த மார்க்கம் அவன் கண்ணுக்கு தென்பட்டது. அந்த குறிப்பை பார்த்துக்கொண்டே பேட்டிலாடா தங்கள் குடிசையை சேர்ந்தான். சேர்ந்ததும் இருண்டுவிட்டது வனத்தில் சுற்றிய அண்ணனும் தம்பி குருடனை வனத்தில் கல்மேல் இருந்தவனை விட்டுவிட்டு குருடன் போன சிலநேரத்துக்குமுன் வந்து குடிசையில் சேர்ந்திருக்கிறான் வீட்டிலுள்ள பெண்டுகளும் தொரெயனும் காலையில் குருடனை வனத்துக்கு கூட்டிக்கொண்டு போய்விட்டு இப்போது தனியாய் வருகிறாய் குருடன் எங்கே என்றுகேட்க அவனை ஓரிடத்தில் கல்லின்மேல் உட்காரவைத்துவிட்டு வனங்களில் சுற்றிக்கொண்டு அவனை மறந்து இப்படி வந்துவிட்டேன் இனி அவ்வனத்துக்கு இருளில் போகவும் வகையில்லையே என்றுசொல்ல பெண்டுகள் வெடியுமுன் மிருகங்களால் என்ன ஆபத்து நேரிடுமோ என்று விசனித்து அழுதுக்கொண்டிருக்கும் தருணத்தில் குருடன் வந்துவிட்டான். வந்ததைப்பார்த்த பெண்டுகளுக்கு செத்தவன் திரும்ப உயிர் உண்டாய் வந்தாற்போலாயிற்று தீராத ஆனந்தம் கொண்டார்கள். கண் திறந்திருப்பதும் அநேக ஆச்சரியப்படத்தக்கதாயிற்று. அண்ணனும் தம்பியை பார்த்து தம்பீ நான் உன்னை மறந்துவிட்டு இப்பொழுதுதான் வந்து குடிசை சேர்ந்தேன். பெண்டுகளோடு உன்னைப்பற்றி பேசிக்கொண்டு விசனத்தில் இருக் கவே நீயும் வந்துவிட்டாய் நல்லதாயிற்று உன் கண் திறந்த வகையை தெரிவிக்க வேணுமென்று கேட்டான். அதற்கு தம்பி, அண்ணா நான் கல்லின்மேலிருக்க மழை வந்துவிட்டதால் மோசம் வந்தது என்று பயந்து அண்ணா, அண்ணா என்று அலறி கூப்பிட்டேன் அக்ஷணத்தில் ஒருவர் எனக்கு குடைபிடித்தார் நீதான் என்று நினைத்து குடையை நல்லா பிடி அண்ணா என்றேன் அதற்கு அவர் அண்ணன் அல்ல நான் கடவுள் என்றார். சுவாமி நல்லா பிடி என்றேன் அப்படியே பிடித்தார் சிலநேரத்திற்குள் மழையும் விட்டுவிட்டது. அந்தக்கடவுள் உன் கண்ணைத்திறப்

பேன், கண் திறந்தால் என்ன தருவாய் என்றார் கண்ணைத்தந்த காரோய்ய வென்று இந்த இடத்தில் வருஷா வருஷம் ஆடுபலி கொடுத்து கொண்டாடி வருகிறேன் என்று சொன்னேன் அதற்கு அவர் குகைக்குள் காண்டியை விடு ஆட்டின் விலை வரும் என்று சொன்னார் சொன்னதும் என் கண் திறந்துவிட்டது அக்கண்ணினால் கடவுளை தரிசிக்க திரும்பி சுற்றுப்புறம் பார்த்தும் தரிசிக்க முடியவில்லை. கடவுள் உடனே மறைந்துவிட்டார் அதனால் விசனப்பட்டேன். பிறகு பொழுது போய் விட்டது. குடிசை வழி தெரியாதே இனி இருந்தால் இவ்வனத்தில் தங்கவேண்டி வருமே தங்கினால் மிருகங்களால் ஆபத்து நேரிடுமே என்ன செய்வேனென்று கடவுளை தியானித்தேன் உடனே காலையில் செடிகளை விலக்கி நாம நடந்த குறிப்பு கண்ணுக்கு தென்பட்டது அந்த குறிப்பின்மேல் வந்து குடிசை சேர்ந்தேன் என்று நடந்ததை எல்லாம் தெரிவித்தான். அதைக்கேட்ட எல்லோரும் சந்தோஷத்துடன் இருந்தார்கள்.

கண் திறந்த இடத்திற்கு கண்ணவரை சோலை என்று பெயரிட்டு அதுமுதல் வருஷா வருஷம் ஆடுபலி கொடுத்துவந்தார்கள் இப்போதும் அவர்கள் வம்சத்தார்கள் கண்ணை தந்த (காரேர்) ஐயா வென்று ஆடுபலி கொடுத்து பெரிய பண்டிகை தினமாக்கி கொண்டாடி வருகிறார்கள். கண் திறந்தும் அந்த ஹெத்தப்பனுக்கு குருட ஹெத்தப்பன் என்கிற பெயரே வழங்கி வருகிறது. தலை மலையில் வசிக்கும் போதே அண்ணன் தம்பி ஏழுபேரில் அந்த குருட ஹெத்தப்பன் தான் தங்கள் குல தெய்வமாகிய ஹிரிய ஒடையனை தன் வசத்தில் வைத்து பூஜித்து வந்திருக்கிறான். ஆகையால் சகல ஏவல்களுக்கும் ஏவல் ஆள் தொரையனும் தன் வசத்தில்தான் இருந்துவரவேண்டியதாயிற்று. இப்படி இவர்கள் பேட்டிலாடாவில் சிலகாலம் இருந்தபின் தாங்களும் தனித்தனியாய் ஹட்டிக்கட்டி பிழைக்க நினைத்து தொட்ட ஹெத்தப்பன் (இவர்கள் எல்லோருக்கும் மூத்தவன்) குருட ஹெத்தப்பனைப் பார்த்து தமபி இந்த இடத்தில்தான் நான் இருந்துக்கொள்ளுகிறேன் எனக்கு வேண்டிய காடுகளை விட்டுவிட்டு சேர்ந்தாப்போல் ஒரு நல்ல இடம் பார்த்து அங்கு ஹட்டிக்கட்டி பிழைத்துவா என்றும், அப்பால் இதிலிருந்து சுற்றுப்புறத்தில் நானும் ஒரு நல்ல ஜாகை பார்த்து ஹட்டிக்கட்டிக் கொள்ளுகிறேன் என்று சொன்னான் அதற்கிணங்கி குருட ஹெத்தப்பன் ஏவலாள் தொரையனை கூட்டிக்கொண்டுபோய் பேட்டிலாடாவிலிருந்து சுமார் ஆறு மைல் தூரம் தாண்டிபோய் ஒரு நல்ல ஜாகை பார்த்து அவ்விடத்தில் ஹட்டிக்கட்டி பிழைப்பது சரி என்று தீர்மானித்துவிட்டு பேட்டிலாடாவை சேர்ந்தார்கள் மறுநாள் அண்ணன் அனுமதிப்பெற்று குருட ஹெத்தப்பன தானும் தன் மனைவியும் பேட்டிலாடா குடிசையில் பிறந்த தன் ஹள்ளி என்னும் மகளை எடுத்துக்கொண்டும் ஹிரிய ஒடைய சுவாமியை எடுத்துக்கொண்டும் தொரெயனையும் அவன் மனைவியையும் கூட்டிக்கொண்டும் முதல் நாள் குறிப்பிட்ட இடம் வந்து சேர்ந்தார்கள். அங்கு ஒரு நல்ல ஜாகையில் கல்லால் ஒரு சிறு மாளிகை கட்டி அதில் ஹிரிய ஒடைய சுவாமியை வைத்து பூஜித்து விட்டு பிறகு தனக்கொரு குடிசையும் தொறையனுக்கு ஒரு குடிசையும் கட்டிமுடித்து குருட ஹெத்தப்பன் தன் மகள் ஹள்ளி என்னும் குழந்தையை மடிமேல்வைத்து விளையாடிக்கொண்டே

இருந்த ஆனந்தத்தால் இது ஹள்ளியூர் என்று சந்தோஷப்பெயர் வைத்து அதில் வசித்துவந்தார்கள் பெட்டிலாடாவில் இருந்த தொட்ட ஹெத்தப்பன் சுற்றுப்புறம் பார்த்து பக்கத்திலுள்ள ஒரு சிறு சோலைமட்டத்தில் ஏறி இதுதான் நல்லஸ்தலம் என்றுநினைத்து அந்த சிறுசோலை ஓரமுள்ள மட்டத்தில் குடிசைக்கட்டி அந்த ஹட்டிக்கு சொணவக்கொரெ என்று பெயர்வைத்து அதில் வசித்துவந்தான் சொணவக்கொரெ என்றால் (சிறுசோலை)

## பேரகண்ணி ஸ்ரீ தொட்ட ஹெத்தையின் வரலாறு.

இப்படி இவர்கள் எல்லோரும் தனித்தனியாய் பிரிந்து குருடஹெத்தப்பன் ஹளியூரில் சிலகாலம் பிழைத்துவருகையில் அவ்விடத்தில் மறுபடியும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது அவனுக்கு காமஜ்ஜன் என்றுபெயர் வழங்கி பிழைத்துவரும் காலத்தில் குருடஹெத்தப்பனுக்கு காலம்முடிந்து சிவனடியை அடைந்துவிட்டான் ஹள்ளியும்காமனும் தகப்பனை அடக்கம்பண்ணி கிரிகளைமுடித்து பிழைத்துவந்தார்கள் ஹள்ளி ஹெத்தப்பனுக்கு வயதுவந்து பெண்தேட ஆரம்பித்தார்கள் அச்சமயத்தில் தொதவனுடு கடாட்டுக்கு ஆரோ புதியதாய் குடிவந்திருப்பதாக கேள்விப்பட்டு அங்கு போய்பார்க்க அவரிடத்தில் ஒருபெண் இருந்தது அந்தப்பெண்ணை தனக்கு கலியாணம் முடித்துக்கொடுக்கும்படி கேட்டான் அவர்களும், வரலாற்றைக்கேட்டறிந்து சம்மதித்து கலியாணத்தை முடித்துக்கொடுத்தும் பிழைத்துவரும்படி ஒரு எருமை காளையை பெண்ணுக்கு பரிசாக ஓட்டிக்கொடுத்தார்கள். பெண்ணையும் எருமையையும் ஹளியூர் சேர்த்து எருமையை பத்திரமாய் காப்பாற்றி பிழைத்து வருகையில் அந்த எருமைக்கு ஈற்று வந்து ஹளியூர் மைதானத்தில் கஷ்டத்துடன் ஒரு கன்றை ஈன்றது. அதோடு எருமைகள் விருத்தியாய் வந்தது. அவைகளைக் கொண்டு ஜீவித்து வருகையில் ஹள்ளி ஹெத்தப்பனுக்கு பாலஜ்ஜன், தூமஜ்ஜன், மூகிலஜ்ஜன் என்று மூன்று ஆண்பிள்ளைகள் பிறந்தார்கள். இளையவனுகிய காமஜ்ஜனுக்கு நாற்பது வருஷம் பிராயம் வந்தும் கலியாணம் முடிக்க பெண்கள்கிடைக்க அரிதாய்விட்டது இப்படி இருக்கும் காலத்தில் கீழ்நாட்டு மூலத்துறை என்னும் ஊரிலிருந்து முத்தன் என்னும் ஒருசெட்டி துணிகளை தலைசுமை சுமந்துக்கொண்டு ஹட்டிகளைத்தேடி வியாபாரம்செய்துகொண்டு வந்து ஹளியூரைச்சேர்ந்தான் அங்கு காமஜ்ஜனைக்கண்டான் தலைச்சுமையை தூக்கிக்கொண்டு தன்னுடன் ஹட்டிகளில் சுற்றி வியாபாரம்செய்துவர கூலிக்குவர கேட்டான் காமஜ்ஜனும் சம்மதித்து நாள் கூலி பேசி அந்தசுமையை தூக்கிக்கொண்டு அங்கங்கு சுற்றி பொழுதுபோக நுந்தளா என்னும் ஹட்டியை சேர்ந்தார்கள் அவ்விடத்தில் தங்கவேண்டியதாயிற்று தங்கிய வீட்டில் உள்ளஹெத்தப்பனுக்கு இரண்டு பெண்கள் மாத்திரம் இருந்தார்கள் ஆண்மக்கள் இல்லை அந்த மூத்தோனுக்கும் வயது எழுபது தாண்டிய வயதாய்விட்டது அந்த பெண்களுக்கு அப்போது வயது மூத்தமகளுக்கு பன்னிரண்டும் இளைய மகளுக்கு வயது எட்டுமாய் இருந்தது வீட்டிலுள்ளவர்களும் காமஜ்ஜ ஹெத்தப்பனும் சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொண்டிருக்கையில் வயதுவந்த நுந்தளா ஹெத்தப்பன் காமஜ்ஜ ஹெத்தப்பன் வரலாற்றை விசாரித்து கேட்டறிந்தபிறகு தனக்குள்

யோசித்து அப்பா என்பெரிய மகளை உனக்கு கலியாணம் முடித்துத்தருகிறேன் என்வீட்டிலிருந்து சேவித்து எங்களை ஆதரித்து வருவாயா என்று கேட்டார் அம்மொழி காமஜ்ஜ ஹெத்தப்பனுக்கு கும்பிட போனதெய்வம் குறுக்கே வந்ததுபோலாயிற்று ஆகையால் அதற்கு யாதொரு தடையும் இல்லாமல் சம்மதித்துக்கொண்டான் மறுநாள் காலையில் தலைசுமை செட்டியாருக்கு சமாதான வார்த்தைகள் சொல்லி அனுப்பிவிட்டு அன்றுடன் அந்த வீட்டிலிருந்து சேவித்துவந்தான் ஹளியூரில் இருக்கும் தன் அண்ணனுக்கும் இது சங்கதியை தெரிவிக்கும்படி செட்டியுடன் சொல்லியனுப்பிவிட்டான் அவ்வீட்டின் சகல காரியங்களை ஒப்புக்கொண்டு பேட்டை என்னும் இடத்துக்குப்போய் உப்பு முதலிய வீட்டுசெலவுகளை தூக்கிக்கொண்டுவந்தும் அந்தக்கிழவன், கிழவியையும் இரண்டுபெண்களையும் ஆதரித்து வந்தான் இப்படி நாலுவருஷகாலம காப்பாற்றிவருகையில் மூத்தமகளுக்கு பதினாறு வயதுவந்து பெரியவள் ஆனாள் இதைக்கேட்டு குந்தகாடு ஒருவாலிபன் நந்தனா வந்து இரதப்பருவப்பெண்ணைக்கண்டு திருட்டுத்தனமாய் போதித்து குந்தகாடுக்கு கொண்டுபோய்விட்டான். காட்டு விறகுக்குப் போன பெண் வீட்டுக்கு வராதிருப்பதை அங்குமிங்கும் தேடிவிசாரித்து அறிந்து தாய்தகப்பன்மார் அடடா காத்திருந்தவன் பெண்ணை நேற்றுவந்தவன் கொண்டுபோய்விட்டானே நாலுவருஷகாலமாய் இந்தப்பெண்ணை நம்பி நம்மை காப்பாற்றிவந்தவனுக்கு என்னென்று சொல்லுவோம் நமது வாக்கு அழிந்துவிட்டதே அவன் அறிந்தால் அவன் நெஞ்சம் எப்படி இருக்குமோ என்று ஏங்கி விசனித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் இப்படி இருக்க இதுசங்கதி காமஜ்ஜ ஹெத்தப்பன் காதிலும்விழுந்தது ஹா! என் தலைவிதி இப்படியா, நாலுவருஷகாலமாய் வீண் பாடுபட்டேனே என் அண்ணனுக்கு என்னென்றுதான் சொல்வேன் என்று மனதுக்குள் நினைத்து விசனித்துக்கொண்டிருந்தான். இவர்கள் மூவரும ஒருவர் முகம் ஒருவர் பாராமல் தங்கள் தங்கள் மனதுக்குள் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள் அப்போது இந்த இளையப்பெண் மாதுவுக்கு வயது பனிரண்டு. இந்த மாதானவள் சகோதரியின் சங்கதியை தானும் கேட்டு தனக்குள் அநேக வருத்தத்துடன் மனம் நொந்துக்கொண்டும் தாய் தந்தையரும் தங்களை நாலுவருஷகாலமாய் ஆதரித்து வந்த காமஜ்ஜ ஹெத்தப்பனும் தங்களுக்குள் நொந்துக்கொண்டிருப்பதை அறிந்து அவர்களைப்பார்த்து தாய் தந்தையர்களே நீங்களும் நம்மை நாலு வருஷக்காலமாய் ஆதரித்து வந்தவரும், இவ்வளவு வாடிய முகத்துடன் விசனிக்கவேண்டியதில்லை. மோசக்காரி அக்காள் மோசம் செய்துவிட்டாள் என்று நீங்கள் வருந்தவேண்டாம் உங்கள் வாக்கு அழியாமல் காப்பாற்ற நான் இருக்கிறேன் நம்மை ஆதரித்து வந்தவரை நன்றியை மறவாமல் நான் உண்மையில் கட்டிக்கொள்ள தயாராய் இருக்கிறேன் என்வாக்கை நம்பி தைரியமாய் இருங்கள் என்று மூவர் முன்னிலையில் ஒரே எண்ணத்துடன் உறுதிமொழி கூறி அவர்கள் மனதை தேற்றினாள். இதைக்கேட்ட தாய் தந்தையரும் காமஜ்ஜ ஹெத்தப்பனும் சந்தோஷப்பட்டு இச்சிறு மாதுவின் தயாள குணத்தையும் இன்ப மொழியையும் பார்த்து மனமாற வாழ்த்தினார்கள். காமஜ்ஜ ஹெத்தப்பன் மாதுவின் வாக்கை உறுதியாய் நம்பி ஒரே எண்ணத்துடன் முன்போலவே சேவித்து அவர்களை ஆதரித்து வந்தான். இப்படி இருந்து வருகையில் காமஜ்ஜ ஹெத்தப்பனுக்கு சில

மாதங்கள் கழிந்து ஒரு சீக்கு உண்டாய் நாலுநாள் சீக்கால் படுத்து அதனால் மரணமடைந்துவிட்டான். இளைய மாதுவும் தன் தாய் தந்தையரும் அநேகமாய் அழுதுக்கொண்டார்கள். உடனே ஹளியூர் ஹள்ளி ஹெத்தப்பனுக்கும் அக்கம் பக்கத்து உறைமுறைகளுக்கும் சாவு சங்கதியை தெரிவித்து எல்லோரும் வந்தார்கள் மறுநாள் காலையில் சாவுகாரியங்களில் இருந்தார்கள். இளைய மாதுவோ இரவெல்லாம் தனக்குள் யோசித்து பின் நடக்கும் தீர்மானத்தை முடித்துவிட்டு தலை சீவும் சீப்பு ஒன்றை கையில் எடுத்துக்கொண்டு வளமைபடி காலையில் கொட்டாய் திறந்து எருமைகளை மேய்க்க போய்விட்டாள். கொட்டாய் திறந்து காட்டில் ஓட்டிக் கொண்டுபோய் காட்டில் ஒருபக்கம் விட்டுவிட்டு தான் தனியாய் நுந்தாளாவுக்கு எதிரிலுள்ள ஒரு சோலைக்குள் நுழைந்து அங்குள்ள ஹெத்தேரி என்னும் ஒருமரத்தடியில் உட்கார்ந்துகொண்டு தலைமயிரை சீவி சுத்தம்செய்து கட்டிக்கொண்டாள். சோலை நிழலால் குளிரை சகிக்கமுடியவில்லை, சுமார் 20 கெஜ தூரத்தில் தன் நேர் முகத்தில் சோலை மரங்கள் சந்தில் காணப்படி சூரியவெளிச்சத்தைக்கண்டாள் அந்த வெப்பத்துக்கு மெல்ல தவந்து அந்த வெப்பத்தில் குளிரை ஆற்றிக்கொண்டு நிலத்தில் உதிர்ந்திருக்கும் இலைகளை கையால் அப்படியும் இப்படியும் விலக்கி யோசித்து கொண்டிருக்கையில் அவ்விலக்கிய இடத்தில் கொஞ்சம் தண்ணீர் தோன்றிற்று இதுஎன்ன காரணமென்று அவ்விடத்தை கையால் சொரண்டினாள் சொரண்டவே இன்னும் அதிகமாய் நீர்கண்டது அதைக்கண்டு தன்னிடத்தில் உள்ள எருமை ஓட்டும் தடியால் குத்தி அந்த மண்ணை கையால் வாரியெடுத்து ஒரு குழி உண்டாக்கினாள் நீர் சுறந்து குழி நிறைந்து ஒரு சிறுகிணறாய்விட்டது கலங்கல் தெளியும்வரை பார்த்து யோசித்து கிணற்றண்டை உட்கார்ந்துகொண்டே இருந்தாள் இப்படி இருக்க சாவுகூட்டத்தில் இருந்த ஜனங்களுக்கு இச்சிறுமாதுவின் கவனம் இல்லாமல் சாவுக்காரியங்களின் மேலேயே கவனத்தில் இருந்துவிட்டார்கள் திதிநடக்கும் தருணத்தில் திதிகளை முடிக்க இச்சிறுமாது வேண்டியதால் மாதுவை கவனிக்க வேண்டியதாய்வந்தது எங்கே தேடிப்பார்த்தும் மாதுவை காணோம் தாய்தந்தையர்களும் விசனித்து ஆக்கிரத்துடன் எருமைகள் மேயும் காட்டுக்குப்போய் கூப்பிட்டும் சுற்றிசுற்றிப்பார்த்தும் கிடைக்கவில்லையே வென்றழுதுகொண்டு சாவுகூட்டத்தில் சேர்ந்தார்கள் சாவு அடக்கம் பண்ணும் நேரமும் ஆயிற்று இனி என்னசெய்வோம் என்று சாவுஎடுத்து அடக்கம் பண்ண ஆரம்பித்தார்கள் இவர் தாந்தகாடு காரன் ஆதலால் தனியாய் ஒருபுதுயிடத்தில் தகனம் செய்வோமென்று யோசித்து மாது உட்கார்ந்திருக்கும் சோலையில் தனக்கு வலமாக ஒருபர்லாங்கு தூரத்தில் ஒரு கல்லயிடத்தில் கொண்டுவந்து தகனம்செய்து நெருப்பு வைத்துவிட்டு ஊருக்கு திரும்பிபோனார்கள் இதுகளைஎல்லாம் பக்கத்திலிருந்தமாது சோலைசந்தில் பார்த்து கொண்டே இருந்தாள் அதற்குள் அச்சிறு கிணற்றுநீர் கலங்கல் தெளிந்தது அந்த நீரை பார்த்தால் பார்க்கையில் கிணற்றுக்குள் பக்கத்தில் நெருப்பில் வேகும் ஹெத்தப்பன் நிழல் உயிரோடிருப்பதுபோல் காணப்பட்டது அதைக்கண்டமாதுவானவள் ஒரேஎண்ணத்துடன் சோலைக்குள்ளாகவே சுடலை அருகே போனாள் சுடலையில் நெருப்புபலமாய் எறிந்துகொண்டிருந்தது அதைக்கண்டமாது ஜனங்களின் குறிப்புக்காக தன்முதுகில் போர்த்திக்கொண்டிருந்த அறைமுண்டு என்னும் துணியை

அருகில் ஒரிடத்தில் வைத்து அதன்மேல் தான் எருமை ஓட்டும் தடியை வைத்து விட்டு கடவுளை தியானித்து நெருப்பில் வேகும் ஹெத்தப்பனை நினைத்து ஒரே மனதுடன் நெருப்பில் குதித்துவிட்டாள். இருவரும தகனத்தில் வெந்துக்கொண்டிருந்தார்கள் இச்சிறுமாது அந்த மூத்தோனுக்கு கல்யாணம் முடித்துக்கொள்ளவில்லை தாய்தந்தையாரின் மனதை ஆற்ற நான் மூத்தோனைகட்டிக்கொள்ளுகிறேன் என்று சொல்லிய வாக்கை அழியாமல் உயிரோடு உடன்கட்டை ஏறி தன் உயிரை மாய்த்தாள் சிலநேரம் கழிந்தபின் தகனத்தில் தவறிய கொள்ளிக்கட்டைகளை நெருப்பில் தள்ளிவைக்க இரண்டுபேர் தகனத்துக்குப்போனார்கள் போனதும் மாது அடையாளத்துக்கு வைத்திருக்கும் துணியையும் தடியையும் கண்டார்கள் கண்டதும் ஆ! இதுவென்ன புதுமைஎன்று நினைத்து தகனத்தைப்பார்த்தார்கள் பார்க்கையில் இரண்டு தேகம் வெந்துகொண்டிருந்தது. காணாமற்போன இளங்கன்னி ஏது காரணத்தினாலோ இந்த துணியையும் எருமை ஒட்டிய தடியையும் அடையாளம் காட்டிவிட்டு நெருப்பில் குதித்து வேகுறாள்என்று நினைத்து இனி என்ன செய்வோம் என்று விசனித்துக்கொண்டு கொள்ளிக்கட்டைகளை நெருப்பில்தள்ளிவிட்டு வேகமாய் ஊருக்குப்போய் ஊரிலுள்ள ஜனங்களுக்குத் தெரிவித்தார்கள் இதைக் கேட்ட ஜனங்களும் மாதுவின் தாய் தந்தையர்களும் காபுறாவால் அதிக ஆத்திரத்துடன் தகனத்தருகேபோய் அடையாள துணியையும் தடியையும் பார்த்து அந்த மாதுதான் என்று தகனத்தைப்பார்க்க இரண்டு தேகம் வெந்துக்கொண்டிருப்பதை கண்டு விசனித்துக்கொண்டு இருக்கையில் தாய் தகப்பன்மார்கள் மயக்கம் கொண்டு விழுந்து தங்களை மறந்து இருக்க, ஜனங்கள் அவர்களை தூக்கிக்கொண்டு வீட்டைச் சேர்ந்தார்கள். வீட்டில் சிலநேரம் கழித்து மயக்கம தெளிந்து அழுது பறண்டு விசனித்துக்கொண்டிருந்தார்கள் மறுநாள் காலையில் தகனத்துக்கு எல்லோரும் போய் அதில் நடக்கும் காரியங்களை எல்லாம் முடித்து செய்யவேண்டிய திதிகளையும் செய்து முடித்து அந்த இடத்திற்கு தாந்தனுடு கொரெ என்று பெயர் வழங்கி வீடுசேர்ந்து சாப்பிட்டானபிறகு மாதுவின் தாய் தந்தையர்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு அவரவர்கள் ஹட்டிகளுக்கு சென்றுவிட்டார்கள். இங்கு தாய் தந்தையர்கள் தீரா விசனத்தில் மூழ்கிக்கொண்டு இருந்தார்கள் ஆனால் இச்சிறு இளங்கன்னி உயிரோடு உடன்கட்டை ஏறி தன் உயிரை மாயித்துவிட்ட அருமையை ஒருவருலும் யோசித்துக்கண்டறியவில்லை ஆனால் இம்மாதுவோ மாயப்பெண், மஹா சக்தி என்று பின்வரும் காரணத்தால் கண்டறிந்தார்கள் இப்படி சிலகாலம் இருக்க ஹளியூரில் ஹள்ளி ஹெத்தப்பன் எருமை ஒன்று ஈற்றுவந்து அவ்வூர் மைதானத்தில் ஒரு கன்றை ஈன்றது கன்று நிலத்தில் விழுந்து உயிர் நிலைக் கொண்டு எழுந்து நிற்குமுன் எருமை ஈன்ற கஷ்டத்தால் தானும் நிலத்தில் படுத்துக் கொண்டது. கன்றுக்கு தைரியம்வந்து எழுந்து நின்றது. படுத்துக்கொண்ட எருமை எழுந்து நிற்கவேயில்லை. கன்று பால் குடிக்க எருமையை சுற்றிக்கொண்டே திரிந்தது அப்படி படுத்த எருமை பதினெட்டு நாள்வரை படுக்கையிலேயே இருந்தது கன்று அதுவரை பால் ஊட்ட எருமையை சுற்றி சுற்றி முலையைக் காணாமல் பாயோடு வருந்திக்கொண்டிருந்தது கன்றும் சாகவில்லை ஹள்ளி ஹெத்தப்பனும் தொரெயனும் படுக்கையிலிருந்த எருமை எழுந்து நிற்க அதன் வாலையும்

கொம்பையும் பிடித்து தூக்கிப்பார்த்தும் எருமை எழுந்து நிற்கவில்லை புல், கவடு, தண்ணீர் முதலியவைகளைக்கொண்டுபோய் வாய்முன் வைத்தாலும் அதுகளை குடிப்பதும் இல்லை, தின்பதும் இல்லை. இப்படி இருந்தும் உயிரை விடுவதும் இல்லை இவைகளின் பரிதாபத்தைப்பார்க்க முடியாமல் எல்லோரும் விசனப்பட்டுக்கொண்டிருந்தார்கள். பதினெட்டாவது நாளில் ஹள்ளி ஹெத்தப்பன் போர்வை வெளுத்து அந்த மைதானத்தில் வெயிலில் காயப்போட்டு இருந்தார்கள். ஹள்ளி ஹெத்தப்பன் அந்தப்போர்வை காற்றடித்துக்கொண்டு போகாமலும் எருமை கன்றுகள் போர்வை மிதிக்காமலும் போர்வை அருகில் காயும்வரை பார்த்து உட்கார்ந்துக்கொண்டும் பக்கத்தில் படுத்துக்கொண்டு இருக்கும் எருமையையும் அதைச்சுற்றிக்கொண்டு அலைகிற கன்றையும் பார்த்து விசனப்பட்டு கடவுளை வேண்டிக்கொண்டிருந்தான். அத்தருணத்தில் மேக்கனூர் ஹப்புக்கோடு என்னும் ஹட்டியிலிருந்து ஜோகி என்னும் ஒரு தொரெயனுக்கு அவ்வூரிலேயே அருள்வந்து அந்த அருளோடவே ஹள்ளியூர் மைதானம் வந்துசேர்ந்து ஹள்ளி ஹெத்தப்பன் முன்வந்து அருளோடு நின்றான். நின்று விசனத்தோடு இருக்கும் ஹெத்தப்பனைப்பார்த்து ஏனய்யா இவ்வளவு விசனம் என்று கேட்டான். ஹெத்தப்பன் எருமையையும் இதன் கன்றையும் காட்டி இந்த ஈற்று வந்து ஈன்ற எருமை கன்றை ஈன்றதும் கன்று எழுந்து நிற்குமுன் நிலத்தில் படுத்துக்கொண்டது இந்த பதினெட்டு நாள்வரையும் என்ன பாடுபட்டும் எழுந்து நிற்கவில்லை கன்று பால் ஊட்ட வழி வகையில்லாமல் எருமையை சுற்றிக்கொண்டே அலைகிறது தாயும் கன்றும் பதினெட்டு நாளாயும் வயிற்றுக்கு ஆகாரமில்லாமல் தம் உயிர்களையும் விடுவதும் இல்லை. அதைப்பார்த்து விசனித்துக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னான். அதற்கு தொறையன் அருளோடு சொன்னதாவது, ஐயா நீர் கவலைப்படவேண்டாம் நான் சொல்வதை நன்றாய் கவனியும் என்றுக்காரணத்தைச் சொல்ல தொடங்கினான் அதாவது உன் சகோதரன் ஒருவன் நுந்தளா என்னும் ஊரில் இறந்துபோனதுண்டா, அவரை தகனம்செய்து சுடலையில் வெந்துக்கொண்டிருக்க வாக்களியாத பன்னிரண்டு பிராயத்து இளங்கன்னிகை ஒருவள் அவர் வெந்துக்கொண்டிருக்கும் சுடலையில் உயிரோடு எறியும் நெருப்பில் குதித்து உடன் கட்டை ஏறி தன் உயிரை மாய்த்தது உண்டா அந்த ஹெத்தையின் பெயர் மாஸ்தி என்று அழைப்பதுண்டா என்றான். இதுகளையெல்லாம் கேட்ட ஹெத்தப்பன் திகிலடைந்து பயங்கரத்தோடு ஆம் உண்டு என்றான் பிறகு தொரெயன் சொன்னதாவது, அந்த மாஸ்தி ஹெத்தே தன் உயிரை மாய்த்ததோடு (மஹா சக்தி ஹெத்தே) ஆய்விட்டாள் ஆகையால் இதோ காயும் போர்வை மாதிரி எழுகெரே போர்வை செய்துவந்து அந்த மஹாசக்தி ஹெத்தையின் பெயரைச்சொல்லி போர்வை கரை மாதிரி நாட்டிவைத்து வருஷாவருஷம் தவறாமல் கும்பிட்டு கொண்டாடிவருகிறேனென்று நினைத்துக்கொண்டு கேரிதழை கொண்டுவந்து எருமை அதன் கன்று இரண்டின்மேல் அந்த கேரிதழையால் தடவு என்றுசொன்னான் அதன்படி ஹெத்தப்பன் பக்கத்திலிருந்த கேரிமரத்தழையை ஒடித்து மஹாசக்தி ஹெத்தையை மனதில் நினைத்துக்கொண்டு தழையால் எருமையின்மேல் தடவ படுக்கையில் இருந்த எருமை திடீரென்று எழுந்து நின்றுவிட்டது கன்றின்மேல் தடவ உடனே தாயின் முலையை ஊட்டிவிட்டது அதைப்பார்த்த ஹெத்தப்பன் முதலானோர் ஆனந்த

கொண்டாட்டம் கொண்டார்கள் உடனே எருமைக்கு புல் தவுடு முதலானதை கொடுக்க கன்றும் நின்றது தண்ணீர்கொடுக்க கன்றுங்குடித்தது அன்றுமுதல் ஹெத்தப்பனுக்கு வேண்டியபாலும் கொடுத்தது தொரையனை அந்த ஹளியூரில் தங்கவைத்து மறுநாள் வேண்டிய உபசாரம்சொல்லி அனுப்ப அவன் ஹப்புக்கோடு தன் ஊரைச்சேர்ந்தான். இவ்விதமாய் ஹளியூரில் சக்தியை சிலகாலம் பூசித்துக் கொண்டாடிவருகையில் இந்த சக்தி ஹெத்தே ஆனவள் தன்வயதுக்கு எருமை மேய்த்தவள் ஆனதால் எருமைகளின்மேல் பிரியமுள்ளவள் ஆகையால் வேண்டும் எருமைகள் அநேகமாய் வரும் அந்த எருமைகளின் சவுகரியத்துக்கும் தான் இளை வயதில் மஹா சக்தி ஹெத்தே ஆனதால் பீடு இல்லாமல் இருக்கும் சௌகரியத் துக்கும் ஒருவனத்தில் கோயில்கட்டி பூசித்து வரவேணுமென்று ஒருவனுக்கு அருள்வந்து அருளில்சொல்லி அந்த அருளோடு ஹளியூரிலிருந்து ஜனங்களை உட கூட்டிக்கொண்டு வடக்குமுகமாய் ஹளியூரிலிருந்து சுமார் நாலு மைல் தூர முள்ள போகண்ணி பெட்டு என்னும் ஒரு மலையின்மேல்போய் நின்று அந்த இடத்தில் கோயில்கட்டி பூசித்து வரும்படி சொன்னான் அதனால் அந்த போகண்ணியில் சக்தி யை பூசித்து கொண்டாடிவரப்பட்டது.

வருஷா வருஷம் மார்கழிமாதம் பௌர்ணமையில் 8 நாள் கொலுவிலிருந்து ஒன்பதாம் நாள் திங்கட்கிழமைதினம் ஸ்ரீ ஹெத்தே திருவிழா வெகு விசேஷத் துடன் நடைபெறும் நுந்தளா சோலையில் தான் கைதொட்ட இடத்தில் தன் சக்தி யால் ஜலம்கண்டு அந்த சிறு சுனைத்துக்குள் காமஜ்ஜ ஹெத்தப்பன் நின்றிருக்கும் நிழல் தோன்றியதால் ஒரே எண்ணத்துடன் ஹெத்தே உடன்கட்டை ஏறி தன் உயிரை மாய்த்ததால் அந்த சுனைத்துறை சுற்றிலும் கட்டடம் கட்டி பல மரங்கள் வைத்து ஸ்ரீ ஹெத்தேக்கேரு (சுனை) என்று பூசித்துக்கொண்டாடி வரப்படுகிறது.

ஹெத்தே திருவிழா முடிந்த இரண்டு வாரத்திற்குள் நாக்குபெட்டு சீமை காரர்கள் பெருங்கூட்டத்தோடு நுந்தளா ஹெத்தே கேருக்குப்போய் அந்தக்கேருக்கும் பூசைசெய்து கும்பிட்டு ஹெத்தே பிறந்த வீட்டில் தங்கி விருந்துண்டு வருகிறார்கள்.

## ஸ்ரீ பெத்தளா சவுடி ஹெத்தே அம்மன் வரலாறு.

இப்படி எங்கள் ஹள்ளி ஹெத்தப்பன் ஹளியூரில் ஜீவித்துக்கொண்டிருக்கை யில் அவ்விடத்தில் தனக்கு பாலஜ்ஜன் ஜமஜ்ஜன் மூலஜ்ஜன் என்னும் பெய ருடைய மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தார்கள். எருமை, மாடுகள் நிறைந்து இருந்த தால் அவைகளை மேய்க்க புல் உள்ள இடம்பார்த்து அங்கு பட்டிகட்டி மேய்த்து காப்பாற்ற வேணுமென்று நினைத்து குக்கை கல் நு என்னும் காட்டுக்கு தொரையனை துணை கூட்டிக்கொண்டு எருமை மாடுகளை ஓட்டி அங்குவந்து சேர்ந்து மரங்களை வெட்டி ஒரு வேலி தொரா கட்டி அதில் எருமைகளை கட்டி தங்களுக்கு ஒரு செட்டுக்கட்டி இருந்து மேய்த்து வந்தார்கள். ஒருநாள் ஹள்ளி ஹெத்தப்பன் தொரையனை நோக்கி என் நுந்தளாவோம் இறந்துபோன தம்பியை ஆதரித்து

வந்த முனியோர்களை பார்த்து வருகிறேன் எருமை மாடுகளை பத்திரமாய் பார்த்துக்
கொள் நாளைக்கு திரும்பி வந்துவிடுவேன் என்று தொரையனுக்கு சொல்லிவிட்டு
புறப்பட்டான். அன்று நத்தம் சேர்ந்து முனியோர்களைக்கண்டு க்ஷேம சுகத்தை
விசாரித்து அங்கு தங்கி மறுநாள் காலையில் வெளியேபோய் தண்ணீரில் முகங்கழுவி
ஸ்நானங்களை முடித்துவிட்டு நேரில் தெரிகின்ற பெம்பட்டிக்கு போய் அந்த ஊரை
பார்த்துவர எண்ணங்கொண்டு முனியோருக்கு சொல்லிவிட்டு பெம்பட்டிக்குப்போக
புறப்பட்டு போய் அங்கு சேர்ந்தான். அதாவது தனக்குள் ஒரு நல்ல பெண் ஒன்று
கிடைத்தால் மறு கல்யாணம் செய்து குந்தை கல்லில் இருந்துக்கொள்ள வேணு
மென்கிற கருத்தை உள்ளுக்குள்வைத்து அப்படி தேடி அலைந்தான் பெம்பட்டிசேர்ந்த
தும் அங்குள்ளவர்கள் கண்டு வரவழைத்து ஒரு வீட்டு திண்ணைமேல் உட்காரவைத்
தார்கள் புது ஆளைக்கண்டதும் வழக்கப்படி யாரென்று பார்க்க அங்குள்ள ஆண்
பெண்கள் எல்லாம் ஹெத்தப்பன் பக்கத்தில்வந்து நின்றார்கள் அந்தக்கும்பலில் ஒரு
அழகிய வாலிபபெண் ஒன்று இருந்தது அந்தப்பெண்ணைப்பார்த்து ஹெத்தப்பன்
ஓ! ஓ! கும்பிடப்போன தெய்வம் குறுக்கேவந்தது போலாயிற்று இந்தப்பெண்ணை எப்
படியாவது கல்யாணம் முடித்தாகவேணுமென்கிற கருத்திலிருக்க அவ்விடத்து பெரி
யோர்கள் க்ஷேமசுகத்தை விசாரித்து வரலாற்றை அறிந்தார்கள் நான் கல்யாணம்
செய்துக்கொள்ள பெண்தேடிக்கொண்டு ஹுளியூரிலிருந்து இங்குவந்தேன் என்று
சொல்ல அவர்களும் ஹெத்தப்பன் நினைப்பிலிருக்கும் பெண்தான் இப்போதுக்கு
தயாரில் இருப்பதால் அதன் தாய்தந்தையர்களைக்கேட்க அவர்களும் சம்மதித்து எல்
லாரும் சந்தோஷத்துடன் கல்யாண ஒப்பந்தம் முடித்தார்கள் அங்கு சாப்பிட்டான
வுடன் ஹெத்தப்பன் எருமை மாடுகளை காட்டில் விட்டுவிட்டு வந்துவிட்டேன்
தொரையன் ஒண்டியாய் இருக்கிறான் நான்போய் அதுகளுக்கெல்லாம் வேண்டிய
ஏற்பாடுகள் செய்துவிட்டு உடனே திரும்பிவருகிறேன் கல்யாணம் முடிப்போம்
என்று சொல்லிவிட்டு புறப்பட்டு குந்தை கல் எருமை பட்டியை சேர்ந்தான் அங்கு
நாலுநாள் இருந்து தொரையனுக்கு தக்க ஏற்பாடுகள் சொல்லிவிட்டு மறுமத்தை
விடாமல் அவசரமாய் போகவேண்டும் என்று புறப்பட்டு பெம்பட்டி சேர்ந்து இங்கு
நான் கல்யாண முறைகளை செய்து முடித்து பெண் இங்குதான் சிலகாலம் இருந்து
வரவேண்டும் நான் போகவர இருந்து தருணம் பார்த்து கூட்டிக்கொண்டு போய்
விடுகிறேன் என்றான். அதற்கு அவர்கள் சம்மதித்து அங்கு கல்யாண சடங்குகள்
செய்துமுடித்தார்கள். ஹெத்தப்பன் அன்றுமுதல் பெம்பட்டிக்கும், குந்தை கல்
எருமை பட்டிக்கும் ஹுளியூருக்கும் அடிக்கடி போகவர நடந்துக்கொண்டே வந்தான்
இப்படி சிலகாலம் கழிந்து பெம்பட்டி ஹெத்தெ கற்பம் தரித்து ஒரு ஆண்
பிள்ளையை பெற்றாள். அந்த ஹெத்தெயின் பெயர் மல்லெ ஹெத்தே என்று பெயர்
குழந்தைக்கு குரு அஜ்ஜன் என்று பெயர் வைத்தார்கள். இப்படி சிலகாலமிருக்க
இந்த சங்கதி வெளியாயிற்று. ஹுளியூரிலிருக்கும் எங்கள் மூத்த தாயாரும் கேள்வி
பட்டு ஹள்ளி ஹெத்தப்பன் மேல் வருத்தப்பட்டு கணவனை வெறுத்தாள். இப்படி
யிருக்க தாய் வயிற்றில் முதல் பிறக்கும் ஆண் குழந்தையைக்கொண்டு தாயார் ஹுளியூர்
கோவிலில் மண்டெதண்ட என்னும் விதி செய்யவேண்டிய முறை இருந்தால்
திருவிழா நாளில் பிள்ளையை தூக்கிக்கொண்டு ஹுளியூர் போய் முடிக்க பிள்ளையின்

தாய் தந்தையர் இருவரும் குழந்தையை தூக்கிக்கொண்டு ஹளியூருக்குப்போனார்கள் போய் தங்கள் வீடைசேர்ந்தார்கள் வீட்டிலுள்ள பெரிய மாதா இவர்களை ஒறை முகத்தோடு வாவழைத்தாள் இவர்கள் வீட்டில் உட்கார்ந்தப்பின் ஹள்ளி ஹெத்தப்பன் மண்டை தண்டக்காரியங்களை தயாரிக்க கோவிலுக்குப்போய்விட்டான். அவர் போனதும் பெரிய மாதாவானவள் இளைய மாதாவைப்பார்த்து குந்தை கல் (கூத்து கல்) விருந்து அன்னையில் பிள்ளையைத்தூக்கிக்கொண்டுவா எந்த மாமி உனக்கு சமைத்து வைத்திருப்பாள் என்று விஷ வார்த்தையை சொல்லிவிட்டாள் அந்த வார்த்தையானது இளைய மாதாவின் மார்பில் அம்பு எய்தவண்ணம் ஆயிற்று. அதனால் இளைய மாதா கடோர விசனத்தால் யோசித்துக்கொண்டிருந்தாள். கோவில் காரியங்கள் முடிந்து மண்டெதண்ட முறை நடத்த இளைய மாதாவைக்கூப்பிட்டார் மாதாவின் மனதில் வேறு நினைப்பு இருக்க நிதியை முடிப்பவள்போல் குழந்தையுடன் கோவில் உள்ளுக்குள் போனாள். போனதும் தலைமேலயிலிருந்துக்கொண்டு வந்த எலேக்கண்ணாடி என்னும் நாட்டிவைத்திருக்கும் லிங்கத்தை மெல்ல எடுத்து தன் மார்பு துணிக்குள் சொருவிக்கொண்டு மண்டைதண்ட முறை நடத்தாமல் நடத்தியதாக வெளியே வந்துவிட்டாள். ஹள்ளி ஹெத்தப்பன் நம்பி வீட்டுக்குப் போகச்சொல்லி அனுப்பிவிட்டுக்கோவில் காரியங்களை முடித்துவருமுன் இளைய மாதா வீட்டுக்குப்போகாமல் பசியால் வருந்திக்கொண்டும் பிள்ளையை தூக்கிக்கொண்டும் குந்தைக் கல்லுக்குப்போய்விட எண்ணி யாவரும் அறியாமல் கோபத்துடன் நடந்துவிட்டாள். கோவில் காரியங்களை முடித்து ஹள்ளி ஹெத்தப்பன் வீடுவந்து சேருமுன் வீட்டிலிருந்த பெரிய மாதாவின் நெஞ்சில் குறுகுறுப்பு வந்து சிறிய மாதாவைத்தேடிப்பார்த்தாள் சுற்றிச்சுற்றிப்பார்த்தும் மாதாவைக்காணாததால் ஓ! ஓ! நான் சொன்ன வார்த்தையால் கோபித்துக்கொண்டு குந்தை கல்லுக்குப்போக நினைத்துப்பசியோடுப்போயிருப்பாள் கணவன் அறிந்தால் கோபிப்பான் என்று நினைத்து தானும் குந்தை கல்லு வழியாய் பின்தொடர்ந்து ஓடினாள். ஹொரசோலைக்குப்பக்கம் போக இளைய மாதா முன் போவதைக்கண்டாள். கண்டதும் நில் நில் ஓடாதே என்று சத்தமிட்டாள். சத்தத்தைக்கேட்ட இளைய மாதா திரும்பி பார்த்துவிட்டு வேகமாய் நடந்தாள். பெரிய மாதா அதிவேகமாய் ஓடி ஹொரசோலை தாண்டி பக்கத்திலுள்ள ஓர் சிறு நீர் ஓடை அருகில்போக சிறிய மாதா அச்சிறு ஓடையைத்தாண்டி அக்கரையில் நின்று நிலத்திலிருந்து மூன்று சிறு ஜல்லிக்கற்களைப்பொறுக்கி எடுத்து கையில் வைத்துக்கொண்டு நிற்க பெரிய மாதா அருகே வந்து ஓடையைத்தாண்டப்பார்த்தாள் இளைய மாதா தாண்டாதே அங்கேயே நில்லு இந்த நீர் ஓடைதான் நம்மிருவருக்கும் எல்லை அந்தப்பக்கம் தாங்கநாடு என்று நீ ஆண்டுக்கொள். இந்தப்பக்கம கைகார் என்று நான ஆண்டுக்கொள்ளுகிறேன் நான் மண்டெதண்ட முறை நடத்தவில்லை இன்றுமுதல் கைகாருக்கு மண்டெதண்ட முறைவேண்டியதில்லை என்று சொல்லி இதோ கல்லறிக்கை இட்டேன் என்று தன் கையிலிருந்த சிறு ஜல்லிகளை பெரிய மாதாவின் முகமாய் தூரிவிட்டாள். பெரிய மாதா அந்த வாக்கை மீறாமல் பயந்து ஓடையைத்தாண்டாமல் நின்றுவிட்டாள். இளைய மாதா குந்தை கல்லுக்கு நடந்துவிட்டாள். பெரிய மாதா நின்ற இடத்தில் வெகுநேரம் நின்று விசனித்துக்கொண்டு ஹளியூருக்குத்திரும்பினாள் அன்றுமுதல் கைகாருக்கு

மண்டெதண்ட முறை நடப்பது நின்றுவிட்டது இளைய மாதா குந்தை கல்லு தன்வீட்டைச்சேர்ந்துவிட்டாள். அன்றுடன் அச்சிறு ஓடை கைகார், தாந்தனுடு இரண்டுக்கும் எல்லையாய்விட்டது.

பெரிய மாதா கணவன் என்ன செய்வானோ, என்னால்தான் இப்படி முடிந்தது என்று விசனத்துடன் யோசித்துக்கொண்டேபோக ஹெத்தப்பன் வீடுவந்து பார்த்தான். இருவரையும் காணோம் ஹெத்தப்பன் சந்தேகித்து ஓ! ஓ! ஏதோ கலகம் நடந்திருக்கும் இளையவள் பசியோடு குந்தை கல் போயிருப்பாள் பெரியவள் கூட்டி வர பின்னுக்கு போயிரிப்பாள் என்று தானும் பசியோடு குந்தை கல் வழியாய் ஓடினான். பாதி வழியில் பெரிய மாதா விசனத்தோடு வருவதைக்கண்டு இளையவள் எங்கே, நீ ஏன் இங்குவந்தாய், என்றுகேட்க மாது பயந்து நடந்ததையெல்லாம் உண்மையாய் தெரிவித்தாள். ஐயனுக்கு கோபம் வந்தும் அடக்கிக்கொண்டு இளைய மாதா பிள்ளையுடன் பசியோடு போன காபுருவால் முதப்போடு வந்துவிட்டான். பெரிய மாதா ஹளியூர் தன் வீடை சேர்ந்தாள்.

ஹெத்தப்பன் அதிவேகமாய் குந்தை கல் வந்து பார்க்க இளைய மாதா குந்தை கல் சேர்ந்து சமையல் செய்துக்கொண்டிருந்தாள் சமையல் முடிந்து இருவரும் சாப்பிட்டு பசி ஆற்றியப்பின் சாவகாசமாய் மாதுவை விசாரித்தான் மாதா நடந்தை எல்லாம் உண்மையாய் தெரிவித்தாள் இருவர் சொன்னதும் ஒன்றாய் இருந்தது எலேக்கண்ணாடியை எடுத்துவந்து வெளியில் செடிக்குள் வைத்திருப்பதையும் சொன்னாள். மண்டெதண்ட முறை நடத்தவில்லை இன்றோடு களிகரைக்கு மண்டெதண்ட முறை இல்லை என்றுசொன்னாள் அதற்கு ஹெத்தப்பன் சந்தோஷப்பட்டான். பிறகு மாதா இனிநாம் இப்படி செட்டில் வசிப்பது சரியல்ல நாம் ஒரு நல்ல ஸ்தலம் பார்த்து ஹட்டிக்கட்டி பிழைப்போம் என்று கணவனுக்கு சொல்ல தானும் அதற்கு ஒப்புக்கொண்டான். மறுநாள் இருவரும் சுற்றிப்பார்த்து குந்தை கல்லுக்கு 2 பர்லாங்கு தூரமுள்ள ஒரு திட்டைப்பார்த்து இதுதான் தகுந்த இடமென்று நினைத்து அங்கு இரண்டு வீடுகள் கட்டியும் எருமை மாடுகளுக்கு பட்டி கட்டியும் முடித்து லிங்கம் வைக்க ஒரு ஸ்தலம் உண்டாக்கி அவ்விடம்போய் அந்த ஊருக்கு பெட்டேர் என்னும் பெயர் வைத்து தொரெயனும் அங்கு ஜீவித்துவந்தார்கள் (பெட்டு என்றால் திட்டு) என பெயர். அங்கு முன் பிறந்திருக்கும் குரு அஜ்ஜன் போக ஹள்ளி கஜ்ஜன், உப்பஜ்ஜன் என்பவர்கள் பிறந்தார்கள். சிலகாலத்துக்குபின் மல்ல ஹெத்தே மூன்று மக்களையும் விட்டுவிட்டு காலமாய்விட்டாள். உறவினர்களுக்கெல்லாம் தெரிவித்து சவத்தை அடக்கம் செய்து திதிகளை முடித்து தீர்ந்தவுடன் ஹெத்தப்பன் இந்தக்காட்டில் இச்சிறு பிள்ளைகளை எப்படி ஆதரிக்கக்கூடும் என்றும் விசனித்தில் கடவுளை வேண்டி யோசித்தான் இனி இந்த சிறுவர்களை காப்பாற்ற வேறுவகை எதுவும் இல்லை. சாது குணமுடைய ஒரு மாது கிடைத்தால் மூன்றாவது கல்யாணம் செய்துதான் ஆகவேணுமென்று அங்குமிங்கும் சுற்றித்தேடி பார்த்து கடைசியாக தொதவனுடு பூசைக்குன்னூர் (சின்னக்குன்னூர்) என்னும் இடத்தில் தயை தாக்ஷண்யம் ஈவு இரக்கம் முதலிய சாந்தகுணமுடைய பெண் இருப்

பதாக கேள்விப்பட்டு அங்குபோய் அந்த அம்மனை பார்த்து அவளது உடைநடை பாவனை ஈவு இறக்கம் முதலிய சாந்தகுணங்களும் இனிய வாய் மொழிகளையும் பார்த்து இவள் ஒரு பத்தினி இவள்தான் பிள்ளைகளை காப்பாற்ற தக்கவள் என்று நினைத்து அம்மாதுவையும் அவள் தாய் தந்தையரையும் சம்மதித்து கலியாணம் முடித்துக்கொண்டான் அந்த மாதுவின் பெயர் மாசியம்மாள். பிள்ளைகளை நன்றும் காப்பாற்றி வந்ததுடன், பிறகு அந்த பெட்டேர் ஹட்டியில் தன் வயிற்றில் மூன்று பெண் பிள்ளைகளை பெற்று மூத்த தாய் மக்கள் மூவரையும் தான் பெற்ற மூன்று பெண்களையும் ஆக ஆறு மக்களையும் ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்களைப்போல் பாவித்து ஆதரித்துவந்தாள், ஆண்களும் தக்க வயதுக்கு வந்தார்கள் பெண்களும் ஐந்து ஆறு வயதுக்குமேல் படிப்படியாக வந்தார்கள். மூத்த மகனாகிய குரு அஜ்ஜ ஹெத்தப்பனுக்கு பூசைக்குன்னூரிலிருந்துவந்து கஞ்சோல ஹானியில் வசிக்கும் சவடி ஹெத்தெ வகையறுவில் ஒரு பெண்ணையும் கல்யாணம் முடித்தார்கள் அவர்கள் இப்போது கஞ்சொ ஹானியைவிட்டு ஒரசோலை கட்டக்கல் என்னும் ஊர்களில் வசிக்கிறார்கள். இப்படி சிலகாலம் பெட்டேரில் வசித்துக்கொண்டிருக்கையில் ஹன்னி ஹெத்தப்பனுக்கு நாள்வந்து காலமாய்விட்டான் சாவுசங்கதியை ஹனியூருக்குத்தெரிவித்தார்கள். ஹனியூரிலிருந்து மூத்த தாயாரும் தன்மக்கள் மூவரும் அதிக விசனத்தோடு பெட்டேர் வந்துசேர்ந்து அழுதுபுறண்டு, மூன்று தாய்மாரில் இறந்தவள் போக உயிரோடிருக்கும் இரண்டு தாய்மாரகளும் மூன்று தாய்மாரின் ஒன்பது மக்களும தாங்கள்செய்யும் சடங்குகளை செய்துமுடித்து சவத்தை அடக்கம் பண்ணிவிட்டு மறுநாள் அவரவர்கள் ஸ்தலத்தை அடைந்தார்கள் பிறகு மாசி ஹெத்தே பெட்டேரில் மக்களை ஆதரித்துவருகையில் மூத்த மகனாகிய குரு ஹஜ்ஜ ஹெத்தப்பன் தான் தனியாய் பிழைத்துவர எண்ணங்கொண்டு பெட்டேரிலிருந்து ஒருமைல் தூரமுள்ள ஒரு இடத்தைப்பார்த்து அங்கு தன் மனைவியோடு போய் ஹட்டிக்கட்டி அந்த ஹட்டிக்குப்பன்னீர் ஹட்டி (பன்னீரைப்போன்றது) என்று பெயர் வழங்கி அங்கு பிழைத்துவந்தான். தான் இவர்களுக்கெல்லாம் தலைவனாதலால் பெட்டேரில் வசிக்கும் தொறையனை தன் ஏவல்காரியங்களுக்கு வரபோக அடிக்கடி பன்னீர் ஹட்டி வந்து தன்னைக்கண்டவிதமாய் இருக்கவேணுமென்று கட்டளையிட்டான் தொறயன் அக்கட்டளைப்படி பெட்டேர்ஹட்டியிலிருந்து பன்னீர்ஹட்டிக்கு அடிக்கடி போய் தான்சொல்லும் ஏவல் காரியங்களையெல்லாம் செய்துமுடித்து பெட்டேருக்கு வந்துக்கொண்டேயிருந்தான். இப்படியிருக்குங்காலத்தில் பெட்டேரிலுள்ள தாயார் வசத்தில் பாரியதப்பட்டை என்னும் ஒரு பாரியதப்பட்டைக்குள் பணம் இருப்பது தனக்கு தெரிந்திருப்பதால் அந்த தப்பட்டையோடு பணத்தை ஹெத்தையைக் கேட்டு வாங்கி வரும்படி தொறையனை அனுப்பினான் அதன் படி தொரையன் பெட்டேர் வந்து தப்பட்டையோடு பணத்தை கொடுக்கும்படி ஹெத்தப்பன் அனுப்பினார் தொரெயன் வந்து தாரும் அம்மா என்று ஹெத்தையை கேட்டான். அதைக் கேட்ட ஹெத்தே உன் குரு அஜ்ஜ ஹெத்தப்பன் பெரியவனாயும் கலியாணம் முடித்து தனி ஹட்டிக்கட்டிப் பிழைத்து வருகிறான் அவனுக்கு தப்பட்டையோடு பணத்தைக் கொடுத்து விட்டு இவ்வனத்தில் இந்த இளமை குடும்பத்தை எப்படி ஆதரிப்பேன் கொடுக்க முடியாதென்று சொல் என்று தொரெயனை அனுப்பி விட்டாள்

தொறெயன் பன்னீர் ஹட்டிக்குப் போய் ஹெத்தப்பனைக்கண்டு ஹெத்தே சொல்லி யதை தெரிவித்தான். அதைக்கேட்ட ஹெத்தப்பன் சினங்கொண்டு அடிக்கடி தொா யனை ஹெத்தேயிடம் கேட்டு வாங்கி வரும்படி அனுப்பிக்கொண்டே வந்தான் இப் படி வந்து கேட்டும் ஹெத்தேகொடுக்கவே இல்லை ஒருநாள் இரவில் தொறயன் பன் னீர் ஹட்டியில் தங்க வேண்டியதாயிற்று அந்த தொறெயனை அதிகாலையில் கண்டிப் பாய் வாங்கி வரும்படி பெட்டேருக்கு ஹெத்தெயிடம் அனுப்பினான். அதனபடி தொறெயன் வருகையில் கெண்ட பனியால் நடக்க முடியாமல் அநேக வருத்தத் தோடு பெட்டேரைச்சேர்ந்தான் ஹெத்தே படுக்கையிலிருந்து அப்போதுதான் எழுந்து உட்கார்ந்திருந்தாள். அச்சமயத்தில் தொறெயன் வீட்டுக்குள்போய் ஹெத்தெயைக் கேட்டான். ஹெத்தே அடிக்கடி இப்படி வருத்துவதைப்பற்றி யோசித்துக்கொண்டு படுக்கையிலிருந்து எழுந்துவந்து கோபத்தால் கொடுக்கமுடியாது என்று சொல்லி விட்டு வெளியே போய்விட்டாள். பக்கத்து செடிமறைவில் இருந்து விசனித்துக் கொண்டிருக்கையில் தொறெயன் பன்னீர் ஹட்டிக்குப்போய் சங்கதியை தெரிவிக்க வீட்டிலிருந்து வெளியே வந்து நடத்தில் போகிறவன் அருகில் செடிமறைவில் இருக்கும் ஹெத்தையைக்காணுமல் குருவஜ்ஜ ஹெத்தப்பன் குளிரில்அனுப்புவதை யும், அதன்படி ஹெத்தே கொடுக்காமல் மறுப்பதையும் வாயால் இருவரையும் நிந் தித்துப்பேசிக்கொண்டு போவதை செடிமறைவிலிருக்கும் ஹெத்தேகேட்டுக்கொண் டாள் அதோடு ஹெத்தே தீராதவிசனம் கொண்டு தனக்குள யோசித்துக்கொள்ள வேண்டியதாயிற்று (அதாவது) நான் எவ்வளவு கஷ்டப்பட்டு இவர்களை காப்பாற்றி வந்தும் என் வயிற்றில் பிறந்திருந்தால் என்னை இப்படி வாதிப்பானு இந்த தொறெ யன் வாயால் என்னை நிந்தித்துப்பேசுவானுகையால் இனி இந்த உலகத்தை விட்டு உயிரைமாய்த்துவிடுவதே சரிஎன்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு வீட்டை அடைந்தாள் வீட்டிலுள்ளவர்களெல்லாம் சாப்பிட்டு வழமைபடி எருமை ஓட்டிக் கொண்டும் அவனவன் காரியத்தின்மேலும் காட்டுக்குப்போய் விட்டார்கள் எப்போ தும்போல் காடெதொரத்தியும் ஹெத்தையும வெளியேவந்து வாசல்வெயிலில் உட் கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள் உள்ளத்தின் நினைப்பு வேருய்இருந்ததால்ஹெத் தேபேசும் வார்த்தையும் தாருமாருப் பேசுவதுபோலாயிற்று தவிர அன்றெல்லாம் ஹெத்தே வேருநினைப்பிலேயே இருப்பதைக் காடெதொரத்திகண்டு சந்தேகித்து கொண்டாள் ஹெத்தே எப்போது போலுமில்லை இன்று உன் முகத்தைபார்க்க வேறுவிதமாய் தோன்றுகிறது பேசும் வார்த்தைகளும் மாறுகிறது காரணத்தை எனக்கு தெரிவிக்கப்படாதா தாயே, என்றுல் அதற்கு ஹெத்தே சொன்னதாவது என்வயிற்றில் பிறந்திருந்தால் குருவஜ்ஜன என்னிடத்தில் வைத்திருக்கும் தப்பட் டையிலுள்ள நகையை தனக்குக்கொடு என்று என்னை அடிக்கடி வாதிப்பானு இந்த தப்பட்டை நகைஎன்னிடத்தில் இருந்தால் அல்லவோ எனக்கு இவ்வளவு வேதனை வரவேண்டியதாயிற்று. இப்படி இருந்தும் உன்புருஷன் வாயால் என்னை நிந்தித்து பேசலாமோ நான் இவர்களை எல்லாம் இதுவரை ஆதரித்து வந்தும் எனக்குகிடைத் தபலன் இதுதானு என்று நினைக்கநினைக்க யோசித்துக்கொண்டிருஞல் தான அப் படி தடுமாருகிறேன் என்று சொல்லி இன்னும் தொறத்தியைப்பார்த்து காடே நான சிலவாக்குகள் கூறுகிறேன் அதுகளை கவனித்துக்கொள் என்று ஹெத்தே சொல்ல

ஆரம்பித்தாள் அதாவது, படுக பாஷையில் குறு அஜ்ஜமக்கள் குருகியாலி ஹன்னி அஜ்ஜமக்கள் ஹறுது பாலி உப்பஜ்ஜமக்கள் உக்கிசி பாலி என்னெட்டா ஹகெ மாடி தவக்க னெத்தநகாரி சாயலி தம்பில் ஹிடிப்பதொணெய ஹத்தெதாம்பதுக்குமேலே தலெகட்டயதாகலி ஈபெட்டேர் மண் பேயதாகலி தப்பட்டையை வெளியில் கொண்டுவந்து இறக்கத்தில் வைத்துக்கொண்டு ஈ பாரிய தம்பெட்ட உருண்டோகி கொட்டம்பிக புத்து காணெதாகலி என்று சொல்லி தப்பட்டையை உருட்டிவிட்டாள் தப்பட்டையோ இறக்கத்தில் மடமடவென்று உருண்டு ஓடி கொட்டக்கடவு என்னும் ஒரு ஆழமான மடுவில் தப்பென்றுவிழுந்து மறைந்துவிட்டது இதைப் பார்த்த கொரத்தி காடேயோ தன்வாயையும் மண்டையையும் தன்கையால் அடித்து கண்ணீர் சொரிந்து விசனித்துகொண்டாள் ஹெத்தே காடேகொறத்திக்கு வேண்டிய ஆறுதல்கள் சொல்லி அவள் விசனத்தை தேற்றினாள்.

அதற்குள் வீடுகளில் போய்சமைக்க சமையல் நேரமாய்விட்டது ஹெத்தே காடேகொறத்தியைப்பார்த்து இனி சமையல்நேரம் ஆயிற்று வீட்டுக்குப்போய் அடுப்பில் நெருப்புப்போடுவோம் என்று ஆத்திரத்தில் ஹெத்தே வீட்டுக்குள்போனாள் காடேகொறத்தியும் ஹெத்தேயின் மறுமத்தை அறியாமல் தானும் சமைக்க தன்வீட்டுக்குள் நுழைந்து விட்டாள் காடே வீட்டுக்குள்போனதும் ஹெத்தே வெளியேவந்து சுமார் ஒருபர்லாங்கு தூரத்தில் இருக்கும் ஹால்கேர் என்னும்இடத்துக்குப்போய் விட்டாள் சிலநேரம்கழித்து காடேகொறத்தி தனக்கு வீட்டில் உப்பு தீர்ந்திருந்ததால் ஹெத்தேயிடம் உப்புவாங்கிவர ஹெத்தே வீட்டுக்குவந்தாள். அவசரமாய் வீட்டில் நெருப்புஎறிக்கவந்தும் அடுப்பில நெருப்பு போடவில்லை ஹெத்தே என்று கூப்பிட ஹெத்தே அங்கு இல்லை வீட்டுச்குள் தேடியும் ஹெத்தையைக் காணோம் வெளியே வந்து கூப்பிட்டும அக்கம் பக்கம் தேடி பார்த்தும் ஹெத்தே காணோம் பகலில் நடந்ததை எல்லாம் கவனிக்கயில் காடெ கொறத்திக்கு சந்தேகம் வந்து ஹெத்தே ஹெத்தே என்று கூப்பிட்டு அலறிகொண்டே ஹால் கேர் சேர்ந்தாள் அதற்குள் அந்த ஹெத்தேயானவள் ஹால்கேர் என்னும் ஆழமான கிணற்றருகேபோய் ஒரே எண்ணத்தோடு கிணற்றில் மூழ்கிவிடப்போய் கிணற்றோரியில் உட்கார்ந்து கிணற்றைப்பார்த்தாள் பார்த்ததும் அந்த கிணற்றுக்குள் காலஞ்சென்ற தன் கணவனாகிய ஹன்னி ஹெத்தப்பனும் மல்லெ ஹெத்தையும் நின்றுக்கொண்டிருக்கும் நிழலைக்கண்டாள். கண்டதும் ஒரே துணிவில விழ ஆரம்பித்தாள். அதற்குள் காடெகொரத்தி கிணற்றருகே வந்துவிட்டாள். காடெயைக்கண்ட ஹெத்தே, காடே கிணற்றுக்குள் ஐயனையும் மல்லெ ஹெத்தையும் கண்டேன் இதோ அவர்களுடன் நானும் போய்விட்டேன் என்று சொல்லிக்கொண்டு கிணற்றில் மூழ்க ஆரம்பித்தான் அதற்குள் பிடித்துக்கொள்ளலாம் என்கிற ஆத்திரத்தில் காடெ எட்டி பிடிக்கையை நீட்டி எட்டியதும் ஹெத்தையின் தோளில் இருந்த ஒரு துண்டு துணி மாத்திரம் காடெயின் கையோடு வந்தது ஹெத்தே கிணற்றில் மூழ்கிவிட்டாள், காடெ கோவென்றழுது புரண்டு வெகுநேரம் கிணற்றைப்பார்த்தும் ஹெத்தேயின் தேகம் காணவில்லை காடெ விசனத்தோடு அழுதுதத்துண்டு துணியை எடுத்துக்கொண்டு வெட்கோ வந்து தன் வீட்டுக்குச்சேர்ந்தாள். ஜாமமூம் இருண்டு

விட்டது. காட்டுக்குப்போனவர்களெல்லாம் வீட்டைச்சேர்ந்தார்கள் காடெ அவர்களுக்கெல்லாம் நடந்ததையும் ஹெத்தெ கிணற்றில் மூழ்கி தன் உயிரைமாய்த்ததையும் தெரிவித்தாள் இதைக்கேட்டு எல்லோரும் கோவென்றழுது இரவெல்லாம் விசனத்திலிருந்து அதிகாலையில் எல்லோரும் கிணற்றண்டை போய்பார்த்தும் தேகம் மேலே வரவில்லை, யாவரும் அழுது புறண்டு வீடுசேர்ந்து விசனித்துக்கொண்டு ஹளியூருக்கும் பன்னீர் ஹட்டிக்கும் சங்கதியை தெரிவித்த எல்லோரும் வந்துசேர்ந்து சடங்குகள் செய்து திதிகளை முடித்து அவரவர் இடத்தைச்சேர்ந்தார்கள். காடெதொரத்தி, ஹெத்தேயின் அந்த துண்டு துணியை ஒரு துணிகளால் வெகு பத்திரமாய் முடிச்சுக்கட்டி தன் வீட்டில் ஓரிடத்தில்வைத்து அதை அந்த மாசிஹெத்தெக்கு பதிலாக பூசித்துக்கொண்டு வந்துதான சாகுங்காலத்தில் தன் முகத்தின்மேல் மூடி சுடலையில் வெய்த்துவிட வேண்டுமென்று தன கணவனுக்கும் தன் மக்களுக்கும் சொல்லிவைத்தாள் அதுநிற்க பன்னீர் ஹட்டியில் வசிக்கும் குருவஜ்ஜ ஹெத்தப்பனும் பெட்டேர் ஹட்டியில் வசிக்கும் ஐந்துமக்களும் நமது தாய் நம்மை இவ்வனத்தில் விட்டுவிட்டு கிணற்றில் விழுந்து தன் உயிரை மாய்த்ததுமல்லாமல் பணமிருந்த தப்பட்டையையும் மடுவில் உருட்டி மாய்த்துவிட்டாள் நாம் எப்படி பிழைப்போம் என்னும் நினைப்பில் விசனித்துக்கொண்டிருந்தார்கள் இப்படி இருக்க ஒருநாள் இரவில் இந்தமூன்று ஆண்மக்களைப்பெற்று தாந்தனுடு கைகாரென்று எல்லைப்பிரித்து இந்த பெட்டேர் ஹட்டிகட்டி பிழைத்துவந்து இறந்துபோன மல்லெ ஹெத்தேயும், பெண்கள் மூவரைப்பெற்று முந்திய ஆண்களையும் இந்தப்பெண்களையும் ஆதரித்துவந்து ஹால்கேர் கிணற்றில், தன் கணவன் உருவத்தைக்கண்டு அக்கிணற்றில் விழுந்து தன் உயிரை மாய்த்த மாசிஹெத்தே இருவரும்வந்து கடைசிகுமாரனுகிய உப்பஜ்ஜ ஹெத்தப்பன் கனவில்தோன்றி ஜோடியாய் நின்றுக்கொண்டு அப்பாமகனே இந்தக்காட்டில் நீங்கள் ஏன் விசனப்படுகிறீர்கள் நாங்கள் இருவரும் சத்திகளாய்விட்டோம் உங்களை மறக்காமல் காத்துவருகிறோம் பயப்படவேண்டாம் நமது போகண்ணி ஹெத்தெமாதிரி ஏழுகெஜ போர்வை நெசவுநெய்து அந்த போர்வையைக்கொண்டு, இப்படி நாங்கள் இருவரும் ஜோடியாய் நின்றமாதிரி நாட்டிவைத்து சவடிஹெத்தெ என்று வருஷாவருஷம் பூசித்துக்கொண்டாடி வாருங்கள் என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டார்கள். காலையில் எழுந்ததும் உப்பஜ்ஜ ஹெத்தப்பன் தான இரவில் கண்டகனவின் விவரத்தை தன் தமயன்மார்களுக்கும் சகோதரிமார்களுக்கும் தெளிவாய்ச்சொன்னான். அதைக்கேட்ட சகோதர சகோதரிகள் ஆனந்தக்கொண்டாட்டம்கொண்டு இந்தமஹா சத்திகளை சவடி ஹெத்தே என்று பூசித்துக்கொண்டாடி வந்தார்கள். அதுமுதல் இந்த சவடி ஹெத்தேயின் கிருபையால் இவர்களுக்கு அன்ன வஸ்திரம் குறைவின்றி கிடைத்து ஜீவித்து வந்தார்கள். இப்படி பெட்டேர் ஹட்டியில் சிலகாலம் ஜீவித்து வந்திருக்கையில் பெட்டேரிலிருந்து வடமேற்கு திசையில் உள்ள சுமார் ஒருமைல் தூரத்தில் இருக்கும் மட்ட ஜாகத்தைப்பார்த்து அந்த மட்டமான ஹாடாவில் போய் ஹட்டிக்கட்டிப்பிழைப்பது சரி என்று நினைத்தார்கள் அப்படி போவதானல் இனி இந்த தொரெயனுக்கு பக்கத்தில் ஒரு தக்க இடம்பாத்து தனியாய் பிழைத்து வா அனுப்பிவிட்டு, நாம்போய் அந்த ஹாடாவில் ஊர்கட்டி பிழைப்போம். எவல்

காரியங்களுக்கு தொரெயன் வேண்டியப்பொழுது தருவித்துக்கொள்வோம் என்று சொல்லி பெட்டிருக்கு சுமார் ஆறு பர்லாங்கு தூரமுள்ள ஒரு இடத்தைப்பார்த்து தொரெயனை குடும்பத்தோடுபோய் அங்கு ஹட்டிக்கட்டி பிழைத்துக்கொள் என்று அனுப்ப அவன் தன் குடும்பத்தோடு அங்குபோய் ஹட்டிக்கட்டி பிழைத்துவந்தான், அந்த தொரெயன் பெயர் பெப்பன் ஆதலால் அந்த ஹட்டிக்கு பெப்பனட்டி என்று பெயர் வழங்கலாயிற்று. தொரெயனை தனியாய் அனுப்பியபின் இவர்கள் தெய்வத்தை எடுத்துக்கொண்டும் எருமைகளை ஓட்டிக்கொண்டும் பெட்டேயைவிட்டு அந்த மட்ட ஜாகத்தில்வந்து ஊர்கட்டி தெய்வத்திற்கும் ஒரு நல்ல இடம் பார்த்துவைத்து அந்த ஹட்டிக்கு ஊர்ஹாடா என்று பெயர்வைத்து அங்கு பிழைத்து வந்தார்கள் ஒருநாள் மத்தியானத்தில் அகஸ்மாத்தாய் நெருப்புபிடித்து அங்குள்ள பூராவீடுகளும் வெந்து சாம்பலாய்விட்டது. இது நல்ல சகுனமல்ல வீடுகள் நெருப்பால் வெந்து தரைமட்டம் ஆன இடத்தில் இனி குடியிருப்பது சரியல்ல, இனி இவ்விடத்தை விட்டுப்புறப்பட்டு வேறு இடம் பார்த்து அங்கு ஹட்டிக்கட்டிப்பிழைப்போம் என்று தீர்மானித்து தெய்வத்தை எடுத்துக்கொண்டும் எருமைகளை ஓட்டிக்கொண்டும் வடமேற்குமுகமாய் சுமார் மூன்று மைல் தூரமுள்ள இடம் வந்து அந்த இடத்தைப் பார்த்து இந்த இடம்தான் சௌகரியமுள்ளது இதில்தான் ஹட்டிக்கட்டி பிழைப்பது சரி என்று அவ்விடத்தில் தெய்வத்திற்கும் சத்திகளுக்கும் நல்ல ஸ்தலங்களை பார்த்துவைத்து எருமைகளுக்கு பெரிய வேலிதொளா கட்டி, அவசரத்தால் தங்களுக்கும் குடிசைகள் கட்டி அங்கு ஜீவித்து ஹிரிய ஓடைய சுவாமியையும் மஹா சத்தி சவுடி ஹெத்தேயையும் பூசித்து வந்தார்கள். இப்படி இவர்கள் அநேகமாய் அலைந்து திரிந்து கஷ்டப்பட்டு கடைசியாக இவ்விடத்தில்தான் மேல்கண்ட தெய்வங்களின் கிருபையால் நிலைநாட்டி பிழைத்து வந்தார்கள். அந்த பெரிய தொளாவைக்கொண்டு அந்த ஊருக்கு பெத்தொளா (பெரிய தொளா) என்னும் பெயர் வழங்கிவந்தார்கள். யன்ஸீர் ஹட்டியில் வசிக்கும் குரு அஜ்ஜ ஹெத்தப்பன் போக, ஹள்ளி கஜ்ஜ ஹெத்தப்பன் உப்பஜ்ஜ ஹெத்தப்பன் இருவருக்கும் வயது வந்து பெம்பட்டியிலிருந்து குடியேறிவந்து பெத்தளாவில் வசிக்கும் பெம்பட்டி பெண்ணை ஹள்ளி கஜ்ஜ ஹெத்தப்பனுக்கும் தூந்தளாவிலிருந்து ஒரு பெண்ணை உப்பஜ்ஜ ஹெத்தப்பனுக்கும் கலியாணம் முடித்துக்கொண்டார்கள். தங்கள் தங்கைமார் மூவருக்கும் வயதுவந்து மூத்த சகோதரியை ஹொன்னதல என்னும் ஊரிலுள்ள ஒருவனுக்கும் அதற்கு இளையபெண்ணை கக்குச்சி ஊர் ஒருவனுக்கும், கடைசி பெண்ணை பூசைக் குன்னூரிலுள்ள ஒருவனுக்கும் படிப்படியாய் கலியாணம் செய்துகொடுத்துவிட்டார்கள். மூன்று பெண்களும் இங்கு சவுடி ஹெத்தெயாகிய சத்தியை பூசித்துவந்த வழக்கம் போல்தாங்கள் கலியாணம் செய்துகொண்ட தங்கள் இடங்களிலும் சவுடி ஹெத்தேயைக்கொண்டு பூசித்து வந்தார்கள். இப்படி இருக்க, பெத்தளாவில் இருக்கும் ஹள்ளிகஜ்ஜ ஹெத்தப்பனும் உப்பஜ்ஜ ஹெத்தப்பனும் இனி நாங்கள் இருவரும் தனி தனியாய் பிழைத்து வருவோமென்று யோசித்து ஹள்ளிகஜ்ஜ ஹெத்தப்பன் தெய்வங்களை பூசிக்க பூசாரித்தனத்துக்கு தக்கவனென்று பெத்தாளாவில் இருந்து தெய்வங்களை பூசித்துவா அவ்விடத்திலேயே இருந்து பிழைத்துக்கொள் என்று சொல்லி அங்கு வைத்துவிட்டு, உப்பஜ்ஜ ஹெத்தப்பன் தெய்வங்களை சரணடைந்து

தன் மனைவியைக்கூட்டிக்கொண்டு, தெற்கு முகமாய்வந்து சுமார் ஐந்து மைல் தூரத்திலிருக்கும் ஓரிடத்தைப்பார்த்து அதில் ஹட்டிகட்டி பிழைப்பது சரியென்று நினைத்து அங்கு ஹட்டிகட்டி பிழைத்துவந்தான் அந்த இடத்தைச் சுற்றிலும் தண்ணீர் சோம்புகள் இருந்ததால் அந்த சுனைப்புகளைக்கொண்டு அந்த இடத்துக்கு ஏழு சுனைப்புகள் உடையது) என்றுபெயர் வழங்கி அங்கு பிழைத்து வந்தான் இப்போது தமிழில் இளித்துறை என்று வழங்கிவருகிறார்கள். அங்கு பிழைத்து வருகையில் உப்பஜ்ஜ ஹெத்தப்பனுக்கு உண்ணி, பர்லா, காக்கெ என்னும் பெயர்கள் கொண்ட மூன்று ஆண்கள் பிறந்தார்கள் பிறந்த சிலவருஷங்களுக்குள் இவர்களின் தகப்பனார் உப்பஜ்ஜ ஹெத்தப்பனுக்கு வயதுவந்து காலமானார் வளமைப்படி சவத்தை அடக்கம் பண்ணி கிரிகைகளை முடித்தார்கள். சகோதரர் மூவரும் சிலகாலம் பிழைத்துவந்து தக்க வயதுவந்ததும் தங்களுக்கு படிப்படியாய் கலியாணங்கள்செய்து முடித்தார்கள். முடிந்த சிலகாலத்துக்கு பின் தாங்களும் தனிதனி ஹட்டிகள் கட்டிப்பிழைத்துவர ஆரம்பித்தார்கள் மூத்தவனாகிய உண்ணிஹெத்தப்பன் இளித்துறையிலேயே பிழைத்துவர அங்கு விட்டுவிட்டு பர்லஹெத்தப்பன தெற்கே சுமார் நாலு பர்லாங்கு தூரம் போய் ஒரு நல்லயிடத்தில் ஹட்டிக்கட்டி அங்கு பிழைத்துவந்தான் அந்த ஹட்டி சுற்றிலும் குன்றுகள் சூழ்ந்து இடையில் தடத்தைப்போல் தவலையும் இருந்ததால் அந்த ஹட்டிக்கு எடப்பிள்ளு (இடையில்தடம்) என்றுபெயர் வழங்கி அங்கு பிழைத்துவந்தான் இப்போது தமிழில் இடப்பள்ளியென்று வழங்கிவருகிறார்கள் கடைசியாகிய காக்கெ ஹெத்தப்பன வடதிசையில் வந்து சுமார் இரண்டுமைல் தூரத்தில் சுற்றிலும் மலைகள் சூழ்ந்து நடுவில் விஸ்தாரமாயும் நெல்வயலைப்போல் ஒரே மட்டமான சமநிலமுள்ளதாயும் அந்த ஹாடாவின மத்தியில் ஒரு ஆறு ஓடிவரும் மலை அடிவாரத்திலும் ஹாடாவின் ஒரு ஓரத்திலும் தக்க இடத்தில் சம அளவில் மும்மூர்த்தியைப்போல மூன்று முகங்களும் உச்சியில் கோயில் கோபுரம்போல் முடிக்கொண்டதுமான ஒரு விசித்திரகல் சிற்பத்தையும்பார்த்து இந்த இடமானது உச்சினிமாகாளி பட்டணத்தைப்போனறது ஆகையால் இவ்விடத்தில் ஹட்டிகட்டி இந்த விசித்திரக்கல்லை ஸ்ரீ ரங்கர் சிலையாக்கொண்டு பூசித்து வருவோமென்று நினைத்து அங்கு ஹட்டிக்கட்டி அன்றுமுதல் அந்தக்கல்லை ஸ்ரீ ரங்கநாதர் சிலையாக பாவித்து பூசித்துவந்தான் சுற்றிலும் மலைகள் சூழ்ந்து நடுவிலிருப்பதால் இந்த ஹட்டிக்கு நடுஹட்டி என்றுபெயர் வழங்கினார். காக்கெ ஹெத்தப்பன் இங்கு தனி ஹட்டிக்கட்டியதும், இந்த ஸ்ரீ ரங்கநாதர் கிருபையாலும் ஸ்ரீ ஹெத்தே சக்திகளின் தயவினாலும் சிரங்கிபட்டணத்து சிக்கண்ணதுரை காலத்தில் களிகார் ஊருக்கு காக்கெ கவுடருக்கு மணியம் என்னும் அதிகாரத்தை அளித்தார் அதுமுதல் ஆறுதலைக்கட்டும் நாளதுவரை அந்தமணியம் குடும்பத்தைவிட்டு மாறாமல் கடவுள் கிருபையால் நிலைநாட்டி வருகிறது காக்கெ ஹெத்தப்பன தலைக்கட்டில் நாலாவது தலைக்கட்டாகிய ஓடநஞ்சப்பன் காலத்தில் அந்த சிலைக்கல் அடியில ஸ்ரீ ரங்கநாதர் கோவில்கட்டி பூசித்துக்கொண்டாடிவருகிறார்கள் கைகாரில் பிழைத்துவந்த குருவஜ்ஜன் ஹள்ளி சஜ்ஜன் உப்பஜ்ஜன் ஆகிய மூவருக்கு பரம்பரையாய் குடிகள் பெருகி பலஹட்டிகள் கட்டி வசித்துவருகிறார்கள். குருவஜ்ஜ ஹெத்தப்பன தலைக்கட்டில் கோபன் இருப்புகல் தொத்த மொக்கெ புதுமந்து என்னும் ஊர்களில் சுமார் எழுபது

வீடுகளும், ஹள்ளிகஜ்ஜ ஹெத்தப்பன் தலைக்கட்டில் மைலபூடு கல்லட்டி பெத்தாளா
அட்டவலை தொரவட்டி கட்டெபெட்டு முதலிய இடங்களில் சுமார் நூற்றைம்பது
வீடுகளும், உப்பஜ்ஜ ஹெத்தப்பன் தலைக்கட்டில், உப்பதலை, எடப்பள்ளி, இளித்
துறை, பெட்டட்டி, கதெஹட்டி, அனக்கரை முதலிய ஊர்களில் சுமார் நூற்றி
ஐம்பது வீடுகளும் பெண்கள் வகையில் ஒசட்டி, ஒன்னேரோ, காத்துகுளி முதலிய
ஊர்களிலும் ஹட்டிகளில் கலந்துகொண்டிருக்கும் பட்டர் குடிகளையும் சேர்த்து
சுமார் நூற்றிருபது குடிகளும் இருப்பார்கள் மொத்தத்தில் இருபத்தொரு ஹட்டி
களுக்கு சுமார் எட்டுநூறு வீடுகளும் கொண்டது கைகார் ஊர் வருஷாந்திர திரு
விழாவில் ஸ்ரீ பெத்தாள சவுடி ஹெத்தெமடத்தில் புது தெசவு செய்யும்போது
ஹெத்தே போர்வைகச்சை, பாங்கு, வஸ்திரம் முதலானவை ஒவ்வொன்றும் ஜோடி
ஜோடியாய் செய்துவர வேண்டியது பெப்பனட்டி காடெதொறைத்தியும், ஒன்ன
தலை, கக்குச்சி, சின்னகுன்னூர் முதலிய இடங்களுக்கு கல்யாணமாய் இருக்கும்
பெண்கள் மூவரும் ஆக நால்வரும் தங்கள் காலம்வரை சவுடி ஹெத்தையை தங்கள்
தங்கள் ஸ்தலங்களில் பூசித்துக்கொண்டாடி வந்தார்கள். இவர்கள் காலஞ்சென்றபின்
இவர்களின் மக்களும் அப்படியே பூசித்துவந்தார்கள். இப்படி சிலகாலம் பூசித்து
வந்தபிறகு சவுடி ஹெத்தே தெசவில் எங்கள் நால்வருக்கும் நாலுவஸ்திரம் சேர்த்து
செய்து தரவேணுமென்றும் அந்த வஸ்திரங்களை எங்கள் ஸ்தலங்களில் கொண்டு
போய பூசித்துவருகிறோம் என்றுக்கேட்டுக்கொண்டார்கள். ஆகையால் சவுடி ஹெத்
தே தெசவில் போர்வை பாங்கு, கச்சை முதலியவைகள் ஜோடி ஜோடியாயும் வஸ்
திரம் மட்டும் ஜோடியோடு நாலுசேர்த்து ஆறுவஸ்திரம் செய்து தரவேண்டியதா
யிற்று மேற்கண்ட நாலு இடத்தாரும் வருஷாவருஷம் மடிஹள்ளாவில் வந்து தலைக்
கொரு வஸ்திரம் வாங்கிக்கொண்டுபோய் தாங்கள் தங்கள் ஸ்தலங்களில் வைத்து
பூசித்துக்கொண்டுவந்தார்கள் சில காலத்துக்குப்பின் தங்களுக்கு தக்க சமயம்
கிடைத்தப்போது அங்கங்கு ஹெத்தே கோயில்கள்கட்டி சவுடி ஹெத்தே தெசவும்
போல் புதுதெசவுகள் செய்து பூசித்துவருகிறார்கள். அதாவது சவுடி ஹெத்தையை
பூசித்துவந்த தங்கள் தங்கள் தாய்மார்களின் பெயரைக்கொண்டு வருஷாந்திர திரு
விழா நடத்திவருகிறார்கள். ஆகையால் சவுடி ஹெத்தே மடத்திலிருந்து வஸ்திரம்
வாங்குவது நின்றுவிட்டது இன்றும் சவுடி ஹெத்தே தெசவில் வழமைப்படி வஸ்
திரம் மாத்திரம் ஆறுசெய்து வரவேண்டியதாயிற்று குருடஹெத்தப்பனுக்கு ஹள்ளி
ஹெத்தப்பனும், காமஜ்ஜ ஹெத்தப்பனும் கூடபிறந்த சகோதரர்கள். காமஜ்ஜஹெத்
தப்பனுக்கு மக்கள் இல்லை ஹள்ளிஹெத்தப்பனுக்கு மூன்று தாய்க்கு ஒன்பது மக்
கள் இருப்பதால் காமஜ்ஜஹெத்தப்பன் ஆண்களைப்பெற்ற இரண்டுதாய் மக்களுக்
கும் தகப்பன் ஆகவேண்டியது போகண்ணி மஹாசக்தி ஹெத்தே ஆறுபேருக்கும்
தாய் ஆகவேண்டியது சவுடிஹெத்தே ஹள்ளிஹெத்தப்பன் மூன்றாவது தாரமாயும்
ஆண்மக்கள் இல்லாததாலும் முந்திய இரண்டுதாரத்து ஆறு ஆண்மக்களுக்குப் தாய்
ஆகையால் போகண்ணி ஹெத்தே பெத்தாள ஹெத்தே ஆகிய இவ்விரண்டு மஹா
சக்திகளும், தாந்தநாடு, கைகார் இரண்டு இடத்துக்கும பொதுவானவைகள் போ
கண்ணி ஹெத்தே கோயில் தாந்தநாட்டில் இருப்பதாலும், பெத்தாள சவுடிஹெத்தே
கைகாரில் இருப்பதாலும் தாந்தநாட்டார்கள் போகண்ணி கோயில் காரியங்களை

முன்னின்று பார்த்தும் பெத்தாள கோயில் கைகாரில் இருப்பதால் கைகார்காரர்கள் முன்னின்று பார்த்தும் வரவேண்டியதேதவிர மற்ற காரியங்கள் யாவும் கைகார் தாந்தநாடு இரண்டு இடத்து இரண்டு தாய்மக்களுக்கும் பொதுவில்தான் நடந்து வருகிறது திருவிழா காலங்களிலும் இரண்டுஹெத்தையர் சந்திப்பு முதலிய முறைகளும் நடந்துவருகிறது. இவ்விரண்டு கோயில்களிலும் வருஷா வருஷம் மார்கழி மாதம் பௌர்ணமியில் எட்டுநாள் முன்பின் உற்சவம் நடந்தேறிவருகிறது அதாவது பூரணம் திங்கட்கிழமையாவது இரண்டுநாள் முன்பின் இருந்தாலும் அந்த திங்கட் கிழமைதினம் கோயிலிலிருந்து பத்துமணிக்கு புறப்பட்டு வனத்திலுள்ள நெசவு மடத்துக்கு ஹெத்தே குடையோடும் அநேக சிஷியர்கள் ஈட்டிவேல்முதலிய தடிகளோடும் போய்சேர்ந்து அங்கு ஏழுநாள் கொலுவிருந்து செட்டியைக்கொண்டு ஹெத்தே போர்வைநெய்து ஏழாவதுநாளில் அந்தநெசவு போர்வையை எடுத்துக் கொண்டு காலை 10-மணிக்கு மடத்திலிருந்து புறப்பட்டு இடைவழியில் கிடைக்கும் வேண்டுதல் அன்னங்களை உண்டுக்கொண்டு அன்று மூன்றுமணிக்கு கோயிலை சேருவார்கள். மறுநாள் திங்கட்கிழமை கொலுவு நடந்து முடிவுபெரும்.

பெத்தாளா சவடிஹெத்தே கோயிலுக்கு கோயில் வருஷாந்திர பூசாரிவேறு இருந்தாலும் திருவிழா காலத்துக்கு உப்பஜ்ஜ ஹெத்தப்பன் தலைக்கட்டில் தர்மகர்த்தாவும் ஹள்ளிகஜ்ஜ ஹெத்தப்பன தலைக்கட்டில், வெளிபூசாரியும் குருவஜ்ஜ ஹெத்தப்பன் தலைக்கட்டில் வெளிபூசாரிக்கு உதவி பூசாரியுமாய் இருந்துவருகிறார்கள். இந்த மூவரைக்கொண்டுதான் உற்சவம் ஆரம்பமாகும் இவர்களுக்கு திருவிழா காலத்தில் தலைக்கொரு புதுபோர்வை காணிக்கை துகையில் கொடுத்துவருகிறார்கள் உப்பஜ்ஜ ஹெத்தப்பன் பரம்பரையில் நடுஹட்டி காக்கெ ஹெத்தப்பன் காலத்திலிருந்து பெத்தாளாவிலுள்ள ஹிரியஒடைய கோயில் சவடிஹெத்தே கோயில், இன்னும் வனங்களிலுள்ள மகாலிங்கம் மாதேஸ்வரன் கக்கேரய்ய, காரேரய்ய முதலிய கைகார் ஊர்பொதுகோயில் தேவாதிகளையும் அவைகளின் எல்லாமுறைகளையும் பரம்பரையாய் கவனித்துப்பார்த்து வருகிறார்கள். ஹெத்தே சத்திக்களின் பிரபலம் வெளிவரும் முன தர்மகர்த்தாக்கள் தங்கள் சொந்த கைசிலவில் ஹெத்தே சத்தியின் உற்சவத்தை நிறைவேற்றி முடித்தும் வந்திருக்கிறார்கள்.

உப்பஜ்ஜ ஹெத்தப்பன் பரம்பரையில் பிறந்து நீலகிரிமலையில் வசிக்கும் நாலைந்து வகை மலைவாசிகளுக்கும் மற்றுமுள்ள அனைவருக்கும் உபதலை (உபதலை) உபகாரம் அளிக்கும் தலைநகராய் இருந்து இந்த ஹெத்தே மஹா சத்திகளின் கிருபையால் காலம் சென்ற ஸ்ரீ H. G. பெள்ளிகவுடர் அவர்கள் பகுதூர் பட்டம் பெற்றும் அவர் அருமை குமாரனாகிய ஸ்ரீ H. B ஆரிகவுடர் அவர்கள் M. L. A பட்டம் பெற்றும் அளவிலா உபகாரங்களை அளித்து முன்னேற்றி வந்ததையும் புகழ்ந்து இனிமேலும் இந்நீலகிரிஜில்லாவுக்கு தனிபிரதிகிடைத்து அவர் தலைமை வகித்து ஏழைகளை காப்பாற்றுவாராக என்றும் வாழ்த்திவருகிறார்கள்.

சவடி ஹெத்தே தன்உயிரை மாய்க்கும் முன்னதாக காடெதொரத்தியுடன் சொல்லிய ஏழுவாக்குகளும் நிறைவேறிவருகிறது உதாரணமாக தலைமலையிலிருந்து

இங்கு குடியேறிவந்த பதினாலு பதினைந்து தலைக்கட்டு ஆகிறது குருடஹெத்தப்பனுக்கு சுமார் இரண்டாயிரம் ஆண்குடிகள் பரவிவருகிறார்கள் கூடவந்த பெப்பதொரையனுக்கு நாளதுவரை பத்தொன்பதுக்குமேல் ஆண்கள் பிறந்து நிலைத்து வருவதில்லை இப்போது பதினைந்து தலைக்கட்டுவந்ததிலிருந்து பத்தொன்பது எண்ணுக்குமேல் ஒன்று இரண்டு ஆண்கள் நிலைத்துவருவதாக சொல்லிக்கொள்ளுகிறார்கள். இதுவே கைகண்ணாடியைப்போல் இருப்பதால் மற்றவைகளை விரித்துகாட்டவேண்டியதில்லை. தலைமலையிலிருந்து இங்குவந்த ஏழுபேர் சகோதரர்களும் தொளையில் தூங்கும குழந்தையை மறந்தும் குருடஹெத்தப்பன் குலதெய்வத்தை மறக்காமல் தன்தோள்மேல் வைத்துக்கொண்டு வந்திருக்கிறான். அரசன் அனுப்பிய படையை தன் பக்தியால் ஆற்றைத்தாண்டாமல் தடுத்தான். தன் கண்கள் இல்லாத மூழு குருடனானான். கண்ணில்லாமல் கானகத்தில் பெரிய கல்மேல் இருந்தான். அங்கு கார்மழையைக்கண்டு காலியானேன் என்று கதறினான் உடனே கடவுள்வந்து குடையை பிடித்து ரட்சித்தார். குருடன் காட்டில் தவிப்பதைக்கண்டு கடவுள் கண் திறந்தார். தன் ஈன்ற எருமை பதினெட்டுநாள் படுக்கையிலிருந்து எழாமலும் ஆகாரமில்லாமலும் கன்று பாலில்லாமலும் உயிரோடிருந்து ஹெத்தே மஹாசக்தியால் அன்று ஈன்ற எருமைமாதிரி நடந்தது தன் குடும்பத்தில் ஸ்ரீ ஹெத்தெயர் மஹா சத்திகளானார்கள். ஏழுபேர் அண்ணன் தம்பிமார் இருந்தும் எலைக்கண்ணாடி தேவரும் தன்வசத்தில் வந்து கைகாரில் நின்றுவிட்டது. தலைமலையிலிருந்து கூடகூட்டிவந்த ஏவல் தொரெயனும் தன்வசம் கைகாரில் இருந்துவருகிறான். கடவுள் கிருபையால் தன் பரம்பரையில் சுமார் நாலாயிரம் ஆண்குடிகள் பரவி தாந்தநாடு கைகார் என்று கட்டி பிழைத்துவருகிறார்கள். தன் பரம்பரையில் பிறந்து இந்த ஜில்லாவிலுள்ள எல்லா மலைவாசிகளுக்கும் தலைமை வகித்தும் வருகிறார்கள். ஆகையால் இதுகளையெல்லாம் ஆழ்ந்து யோசித்தால் குருடஹெத்தப்பனை ஒரு அவதாரப்புருஷனாக பாவிக்கலாம் குருடஹெத்தப்பன் சாகுமுன் சிலகாலம் ஹளியூரிலிருந்து முன் வனத்தில் வந்து காரைமரத்தடியில் கண்ட கடவுளின் திதியை கண்டறிந்து வருவோமென்று உலிக்கல் ஹாலிய ஹெத்தப்பனையும், குன்னூரிலிருந்து குன்ன ஹெத்தப்பனையும் தருவித்துக்கொண்டு மூவரும் காரைமேடைசேர்ந்து அந்த காரை மரத்தருகே போகையில், அங்கு அக்கம் பக்கத்து ஊர் ஒரு குடியான ஒக்கலிக்கவுண்டன் மாடுகளை மேய்த்துக்கொண்டு நிற்பதைக்கண்டார்கள். கண்டு பேசுகையில் அவர் இந்த காட்டு வனத்துக்கு யாது காரணமாய் வந்தீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு இவர்கள், முன் நடந்ததை எல்லாம் கவுண்டனுக்கு தெரிவித்தார்கள்.

அதாவது காரை மரத்தை சுட்டிக்காட்டி, அந்த மரத்தடியில் நிழலில் உட்கார்ந்திருந்துவிட்டு எழுந்துபோகையில் நாங்கள் கொண்டுவந்த ராசிக்கூடையை மறந்துவிட்டு விட்டுப்போய் சில தூரம் போக கவனம் வந்து திரும்பி வந்து பார்க்க அந்த ராசி கூடைக்குள் படுத்து தன் ஏழு தலையை கூடைக்கு மேல் தூக்கிக்கொண்டிருக்கும் நாகத்தைக் கண்டு பயந்து எங்கள் குல தெய்வமாகிய ரங்கநாதர் நமது கூடையில் உதித்து விட்டார் என்று நினைத்து அந்த நாகத்திற்கு சரணம் செய்துவிட்டுப்போய் விட்டோம், நாங்கள் காட்டில் சுற்றி திரிபவர்கள் ஆதலால்

இங்கு வந்து இந்த ரங்கநாதரை பூசித்துவர வகையில்லாமல் போயிற்று, ஆயினும் அதோ தெரிகிற அந்த நீலகிரி மலை உச்சியில் இந்த ரங்கநாதர் சிலைவைத்து பூசித்துக்கொண்டு அந்த வனங்களில் திரிந்து வந்தோம் இப்போது அவர் நிலைமையை கண்டு நினைவு வந்து இங்கு வந்தோம் என்று சொன்னார்கள் அதைக்கேட்ட அந்த ஒக்கிலிய கவுண்டனுக்கு ஆனந்த சந்தோஷம் வந்து ஹா! அப்படியா சில வருஷங்களுக்கு முன் என்னுடைய முதல் ஈற்று பசு ஒன்று கன்றை ஈன்று ஈன்றது முதல் நாள்தோறும் காலையில் கொட்டாய் திறந்ததும் தன் பாட்டில் இங்குவந்து பாலை சுறந்துவிட்டு திரும்ப வந்து பால் கொடுப்பதை நாங்கள் அறியவில்லை ஒரு வாரம் கழிந்தபின் இந்த பசு கன்றை கண்டவுடனே கன்றுக்குபால் கொடுப்பதில்லை எங்கேயோகொஞ்சதூரம் போய்விட்டுவந்து கன்றுக்குபால் கொடுக்கிறதே என்று கவனித்தேன் கவனித்தபின் மறு நாள் அந்த பசு வழமைப்படி வந்தது நான் பசுவைப்பார்த்துக்கொண்டே சில தூரத்துக்குப்பின் நடந்தேன் இந்த காரை மரத்தடியில் நின்றது அந்த இடத்துக்கு பசுவின் பால் சுறந்தது ஆகையால் அன்று முதல் எனக்கு ரங்கநாதர்உற்பத்தி ஆனார் என்று நினைப்பில் தோன்றி அன்று முதல் இங்கு வந்து பூசித்து கொண்டாடி வருகிறேன் என்று சொன்னார் பசுவும் இங்கு வாராமல் நின்றுவிட்டது என்று சொன்னார் இதைக்கேட்டவுடன் குருட ஹெத்தப்பன் முதலிய மூவருக்கும் ஆனந்த சந்தோஷம் வந்து அந்த காரெமர மேடை கும்பிட்டு வணங்கி குடியான கவுடனுக்கும் சந்தோஷ வார்த்தைகளை சொல்லி அவரிடத்தில் அனுமதி பெற்று நீலகிரி மலையைச்சேர்ந்தார்கள் இப்போது இவர்கள் வமிசத்தில் வறக்குறைய எல்லா ஹட்டிகளிலும் ஸ்ரீ ரங்கநாதர் கோயில்கள் கட்டி பூசித்துக் கொண்டாடி வருகிறார்கள்.

நீலகிரி மலையிலுள்ள தொதுவநாடு, பறங்கினாடு, மேக்கனாடு, குந்தாநாடு, வயநாடு, முதலிய நாடுகளிலும் இன்னும் ஹாசனூர், கூடலூர், நெலம்பூர் அட்டாபடி என்னும் இடங்களிலும் உள்ள எல்லா படுக வம்சத்தாரும், இந்த ஸ்ரீ ஹெத்தே மஹா சத்திக்களின் திருவிழா நாள் ஒன்றை மாத்திரம் பொது பண்டிகை தினமாகக் கொண்டு, பூராவும் பண்டிகை செய்து விடுமுறை நாளாக்கி நடந்து வருகிறார்கள்.

இந்த சரித்திரத்தை வாசிக்கிறவர்களும், வாசிக்க கேட்டவர்களும் சிரஞ்சீவியாக வாழக்கடவார்.

முற்றிற்று.



கடவுள் துணை.

# ஸ்ரீ
# ஜெத்தயம்மாள் சரித்திரம்.

புளு மவுண்ட்டன் பிரஸ், குன்னூர்.



N. N. பொக்கமாதா கவுடர்,
நடுஹட்டி,
கட்டபெட்டி போஸ்ட்.



## குன்னூர் புளூ மவுண்ட்டன் அச்சியந்திரசாலையில்

சகலவிதமான அச்சு வேலைகளும், தற்காலத்திற்கேற்ற முறையில் கண்ணைப்பரிக்கும் அழகிய கலர் வர்ணங்களில் பிரிண்ட் செய்து கொடுக்கப்படும்.

கார்ட் போர்ட் பாக்சுகளும், பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய நோட்டு புஸ்தகங்களும் செய்து கொடுக்கப்படும்.

மற்றும் ரப்பர் ஸ்டாம்புகள், போட்டோ பிளாக்குகள், சினிமா சிலைடுகளும், குறைந்த சார்ஜில் குறித்த காலத்தில் செய்துக்கொடுக்கப்படும்.




கடவுள் துணை.

# ஸ்ரீ
# ஹெத்தயம்மாள் சரித்திரம்.

புளூ மவுண்ட்டன் பிரஸ், குன்னூர்.